பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்13 வள்ளுவர்ஆண்டு2029 தை 28செவ்வாய்க்கிழமை (10-02-1998)UTHAYAN A Lively National Tamil Daily கதிர்65

# மாகாணசபைத்தேர்தல் மே மாதத்தில் நடக்கும்?

## தமிழ்க் கட்சிகள் தயாராகின்றன

கொழும்பு. பெப்ரவரி 10

வடக்கு, கிழக்கு மாகாணசபை எதிர்வரும் ஜூன் மாதத்தில் கூடக் கூடியதாக மாகாணசபைத் தேர்தல் எதிர்வரும் மே மாதத்தில் நடத்தப்படும் என கொழும்பில் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மாகாணசபைத் தேர்தல்களை எதிர்கொள்வதற்கான ஆயத்தங்களில் தமிழ்க் கட்சிகள் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

மாகாணசபைத் தேர்தல்கள் ஜூனுக்கு முதல் நடைபெறுவது அனேகமாக நிச்சயம் என்று குறிப்பிட்ட புளொட் தலைவரும் எம்பியுமான த. சித்தார்த்தன், தேர்தலை எதிர் கொள்வதற்கான வழிமுறைகள் குறித்து தமது கட்சி ஆராய்ந்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரை, நடந்து முடிந்த யாழ். குடாநாட்டின் உள்ளூராட்சித்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு மின் விநியோகம் வழமைக்கு

மட்டக்களப்பு பெப். 10

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான இங்கினியாகல மின் விநியோகம் நேற்று இரவு முதல் மீண்டும் வழங்கப்படுகிறது.

சுதந்திர தினத்துக்கு முதல் நாள் இரவு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள போரதீவுப் பகுதியில் இந்த மின் விநியோகம் துண்டிக்கப்பட்டது. (ஐ-21)

## நுவரெலியாவில் நேற்று கடையடைப்பு! மறியல்!!

சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைத்து 6 லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் மேற்கொண்டுள்ள வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு ஆதரவாக நேற்று நுவரெலியா மாவட்டத்தின் பல இடங்களிலும் கடை அடைப்பு மற்றும் மறியல் போராட்டங்கள் நடைபெற்றன.

மலையக மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் அக்கரைப்பத்தனை, உடப்புசலாவை ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்ட மறியல் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் பங்குபற்றினர். ஹட்டன், சாமிமலை, அக்கரைப்பத்தனை, உடப்புசலாவை, நோர்வூட் பகுதிகளில் பெரும்பாலும் கடைகள் மூடிக் கிடந்தன. ஊர்வலங்கள், பேரணிகளில் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

அக்கரைப்பத்தனையில் நடந்த மறியல் போராட்டத்தில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், பிரதி அமைச்சருமான சந்திரசேகரனும் மலையக மக்கள் முன்னணியின் மாவட்டத் தலைவர்கள், அமைப்பாளர்களும் கலந்து கொண்டனர். (ஐ-9-21)

## யாழ்ப்பாண மாநகர சபைக்கு தேவையானால் மீண்டும் தேர்தல்!

### கூட்டணி வட்டாரங்கள் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 10

''யாழ் மாநகரசபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி அறுதிப் பெரும்பான்மை ஆசனங்களை பெறாவிட்டாலும்கூட யாழ். மாநகரசபை நிர்வாகத்துக்காக ஏனைய கட்சிகளுடன் எமது கட்சி கூட்டணி அமைக்காது''

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்ததாகக் கொழும்பு பத்திரிகை ஒன்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஹட்டன் நகரில் கோஷ்டி மோதல்

### 20 தொழிலாளர்கள் காயம்!!

கொழும்பு, பெப். 10

ஹட்டன் நகரில் நேற்றுக் காலை இரு கோஷ்டிகளுக்கு இடையே இடம்பெற்ற மோதலில் 20 தோட்டத் தொழிலாளர்கள் காயமடைந்தனர்.

தொழிலாளர் போராட்டத்துக்கு ஆதரவாகக் ஹட்டன் நகரில் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. அச்சமயம் ஒரிரு கடைகள் திறந்திருந்தன. ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் கடைகளை மூடுமாறு கேட்டனர். அதனையடுத்து ஏற்பட்ட வாய்த்தகராறு மோதலாக மாறியது. இரு கோஷ்டிகள் கற்களையும் தடிகளையும் பயன்படுத்தி மோதலில் ஈடுபட்டன. அதனையடுத்து பொலீஸார் சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்து சென்று கண்ணீர் புகைக் குண்டுகளை பயன்படுத்தினர். வானத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்து நிலைமையைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

இச் சம்பவத்தில் காயமடைந்தோரில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை. (ஐ-21)

## கிளிநொச்சி நகரைக் கைப்பற்ற படையினர் தொடர்ந்து கடுஞ்சமர்

வவுனியா, பெப். 10

கிளிநொச்சி நகரைக் கைப்பற்றுவதற்காக அரசுத்துருப்புகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதாகவும் —

கடுஞ்சமர் புரிந்து தாங்கள் அதைத் தடுத்து வருவதாகவும் —

விடுதலைப் புலிகளின் வானொலியான ''புலிகளின் குரல்'' நேற்றிரவு தெரிவித்தது.

கிளிநொச்சி நகரைக் கைப்பற்றுவதற்குப் படையினர் எடுக்கும் முயற்சிக்கு எதிராக புலிகள் கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் அறிவிக்கப்பட்டது.

கடந்த சனி இரவு 10.30 மணியில் இருந்து கரடிப்போக்குச் சந்தியிலும், பரந்தன் சந்தியிலும் முன்னேற முயன்ற படையினருடன்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கண்டித் தாக்குதலைக் கண்டித்து பேரணி நடத்த பிக்குமார் ஏற்பாடு!

கொழும்பு, பெப். 10

கண்டி தலதா மாளிகை மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலைக் கண்டித்தும், அதனால் மனம் நொந்து போயுள்ள சிங்கள பௌத்தர்களின் மனச் சாந்திக்காகவும் மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடத்த பௌத்த பிக்குமார் சங்கம் தீர்மானித்துள்ளது.

நேற்று கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் பௌத்த பிக்குமார் சங்க அமைப்பாளர் இஸ்டாலனே தம்மா சங்கார தேரோ இதனை அறிவித்தார்.

அனுராதபுரத்தில் இருந்து கண்டிக்கும் பின்னர் கண்டியில் இருந்து கொழும்புக்கும் இந்த ஊர்வலம் நடத்தப்படும். பல்லாயிரக்கணக்கான பௌத்த துறவிகள் அதில் பங்குபற்றுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-உ-10)

## தம்பலகாமம் படுகொலைச் சம்பவங்கள்: சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட 8பேர் கைது! ஐவர் தலைமறைவு!!

மட்டக்களப்பு, பெப்.10

தம்பலகாமம் பாரதிபுரத்தில் 8 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சப் இன்ஸ்பெக்டர் உட்பட 8 பேர் சந்தேகத்தின் பேரில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் இரு கான்ஸ்டபிள்கள், மூன்று ஊர்காவல் படையினரும் அடங்குவர்.

கைது செய்யப்பட்ட 8 பேரும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அடையாள அணிவகுப்பு நாளை புதன்கிழமை திருமலை நகரசபை மண்டபத்தில் நீதிபதி எம். கே. செல்வராஜா முன்னிலையில் நடைபெறவுள்ளது.

பாரதிபுரம், பொக்குறுணி ஆகிய பகுதிகளில் சம்பவம் நடைபெற்ற தினத்தன்று கடமையில் இருந்த பொலீஸார் மற்றும் ஊர்காவல் படை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 8 இளைஞரைக் கொல்ல 36 ஆயிரம் ரவைகள்!

கொழும்பு, பெப். 10

தம்பலகாமத்தில் பொக்குறுணி என்னும் இடத்தில் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் எட்டுப்பேர் பொலீஸாரால் படுகொலை செய்யப்பட்டமை தெரிந்ததே. இந்தப் படுகொலைகளை புரிந்தோர் அன்றையதினம் சுமார் 36 ஆயிரம் துப்பாக்கி ரவைகளைப் பயன்படுத்தியுள்ளதாக பொலீஸ் விசாரணைகளை மேற்கொள்ளாட்டி பி. பி. ஸி சிங்கள சேவையில் தெரிவிக்கப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் பாஸ் நிறுத்தம்

வவுனியா மத்திய மகாவித்தியாலய நலன்புரி முகாமில் தங்கியுள்ள மக்களுக்கு வெளியே செல்வதற்கான 'பாஸ்' நேற்று வழங்கப்படவில்லை.

தினமும் 4 மணி நேரம் வெளியே சென்று நடமாட இவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி செல்லம்மா நன்னித்தம்பி

தோற்றம்: **08-04-1933**
மறைவு: **11-01-1998**

எங்கள் பாசத்தின் குலவிளக்காய்
பண்பின் சிகரமாய் எம்மை
அன்புடன் அரவணைத்து இன்புற
வாழ வைத்த அன்பின் அன்னையே!
கொழும்பில் சிவபதமடைந்த தெய்வமே!
மனையெல்லாம் உமது காட்சி
மனமெல்லாம் உமது தோற்றம்
கனவெல்லாம் நீரே! மாறுமோ
எங்கள் துயரம்?

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

நவாலி தெற்கு,
அராலி.

(53270)

---

## அடிக்கல்

நெல்லியடி, பெப். 10

தென் புலோலி ஸ்ரீ முதலி அம்பாள் ஆலயத்துக்குரிய சுற்றுமதில் அத்திவார சங்குஸ்தாபன விழா இன்று செவ்வாய் காலை 10 மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

மேற்படி ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ அ. பிரேமச்சந்திரக் குருக்களினால் அடிக்கல் நடப்படும்.

(இ-109)

---

நெல்லியடி

## மஹாத்மா வெண் திரையில்

இன்று முதல்
பிரபு - சுலக்சுமி
நடித்த
★ பொன் மனம்
காட்சிகள்:- 10-30, 2-30
(ப.நே.) (இ/2765)

---

## லிபேட்டி சினிமா

அச்சுவேலி.

30 அடி அகலத் திரையில்
இன்று மட்டும்
M.G.R., ஜெயலலிதா
நடித்த
**அடிமைப்பெண்**
பழைய நேரம்
10-30, 2-30,
(53059)

---

## வெளிவந்துவிட்டது

வெகுதானிய வருஷ [1998, 99]
**இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம்**
வாங்கிப் பயனடையுங்கள்.
**விலை ரூபா: 60.00**
கிடைக்குமிடம்
## சோதிட விலாச புத்தகசாலை

46, பெரியகடை, யாழ்ப்பாணம்.
கே. கே. எஸ். வீதி, கொக்குவில்.

(53274)

---

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
23 — 06 — 1925



ஆண்டவன் அடியில்
05 — 02 — 1993

## அமரர் வேலுப்பிள்ளை முத்துக்கிருஷ்ணர்
(மாயவர்)

**திதி: 10 – 02 – 1998**

ஐயா!
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்பட்ட எங்கள் அன்புத்தெய்வமே!
நீர் மறைந்து ஆண்டுகள் ஐந்து உருண்டோடி
விட்டனவே

ஆனாலும் எம்மனதில் ஆறவில்லை இத்துயரம்
அனுதினமும் எம்மனதில் அணையா ஒளிவிளக்காய்
ஒளிர்ந்திடும் உம் நினைவுகள்.

உன் பிரிவால் வாடும்
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

காளிகோயிலடி,
மல்லாகம்.

(கி / 2858)

---

# மீண்டும் ஆரம்பம்



## பவானி விலாஸ் கச்சான் அல்வா

எமது தொழிலகம் நாட்டுப் பிரச்சினை
காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டு
**மீண்டும் தைப்பூசநன்னாளில்**
இன்று (10-02-98) செவ்வாய்க்கிழமை
பகல் 12-00 மணியளவில் வரும்
சுபவேளையில் ஆரம்பிக்கப்படுகின்றது.

என்பதை வாடிக்கையாளர், ஆதரவாளர்,
அன்பர்கள், நண்பர்கள், அனைவருக்கும்
அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்: S. தனராஜா



## பவானி விலாஸ் தொழிலகம்

32/1, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

(53276)

---

உ
சிவமயம்

# ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான ஈசுர வருடம் தைத்திங்கள் 29 ஆம் நாள்
[ 11 - 02 - 98 ] புதன்கிழமை பகல் 9 மணி முதல் 10 மணிவரையுள்ள
ஆயிலிய நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிவரும் சுபமுகூர்த்த வேளையில்

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறைசெல்வன்
**தவக்குமார்**
(ஸ்ரீ பவானி உரிமையாளர்)
அவர்களுக்கும்



எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**விஜயராணி**
அவர்களுக்கும்

திருமாங்கல்யதாரணம் நல்லூர் சிவன் கோயிலில் இனிது நிகழத்
திருவருள் கூடியிருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராக
வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்!

**திருமதி அருளானந்தம்**
700, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.


**திருமதி சுப்பிரமணியம்**
21/1, ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் சார்பில்)

(53275)

---

# வியாபாரப் பெருமக்களுக்கும் அரசாங்க நிறுவனங்களுக்கும்



உலகப் பிரசித்தி பெற்ற
**பனசோனிக்** (ஜப்பான்)
★ போட்டோ பிரதி இயந்திரம்
★ பக்ஸ் இயந்திரம்
★ நாஷனல் ரீ. வி. ★ டெக்
★ மேசை விசிறி ★ படுக்கை அறை விசிறி

ஆகியவற்றின் வடமாகாண விநியோகஸ்தர்களாக நாம் நியமிக்கப்பட்டுள்ளோம்.

முன்கூட்டியே உங்கள் தேவைகளைப் பதிவு செய்து கொள்ளவும். புத்தம் புதியவை ஒரு வருட உத்தரவாதத்துடன் விநியோகிக்கப்படும்.

விசாரணைகளுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

## சமுத்திரா ரேடர்ஸ் லிமிட்டெட்

23/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(துரை & கோ, பற்றறி கடை அருகே)

(58266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதாமுக்கு ஆதரவாக பலஸ்தீனத்தில் பேரணி

ஹெப்ரோன் பெப். 10 ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசெய்னுக்கு ஆதரவு தெரிவித்து பலஸ்தீனத்தில் பேரணி ஒன்று இடம்பெற்றது

இந்தப் பேரணியின் போது பலஸ்தீனர்கள் இஸ்ரேலிய துருப்புக்கள் மீது கல்லெறிந்து வன் செயலில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க இஸ்ரேலிய படையினர் றப்பர் குண்டுகளை ஏவினர்.

இத் தாக்குதலில் 4 பேர் காயமடைந்தனர்.

இவர்களில் ஒருவர் பலஸ்தீன காவல்துறையினர் இருவர் செய்தியாளர்கள்.

ஐ. நா. — ஈராக் முறுகல் நிலை தொடங்கியதில் இருந்து சதாமுக்கு ஆதரவாக பலஸ்தீனத்தில் இடம் பெற்ற மிகப்பெரிய பேரணி இதுவாகும். (இ-3)

# வளைகுடா பிரச்சினைக்கு தீர்வு அரபு அணியின் முயற்சி

றியாத், பெப். 10 அமெரிக்க – ஈராக் நெருக்கடிக்கு தீர்வு காண புதிதாக உருவாக்கப்பட்டுள்ள அரபு அணி என்ற அமைப்பு புதிய திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளது.

இந்த அணியின் தலைவர் கெஸ்மத் அப்துல் மிகே என்பவர் அவசர பயணம் ஒன்றை ஈராக் தலைநகர் பாக்தாத்துக்கு மேற்கொண்டார்.

அங்கு பேச்சுக்கள் நடத்தி அவர் கெய்ரோ திரும்பியுள்ளார்.

அரபு அணியின் திட்டம் தீர்மான வடிவில் ஐ. நா. பாதுகாப்பு சபையில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

ஈராக்கின் இறைமையையும், கௌரவத்தையும் ஊறுபடுத்தாத வகையிலும் —

அதே சமயம் நாசம் விளைவிக்கக்கூடிய ஆயுதங்கள் உள்ளன என்று கருதப்படும் தளங்களுக்கு தடையின்றி செல்லும் வகையிலும்— அரபு அணியின் தீர்மானம் அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஈராக் மீதான இராணுவ நடவடிக்கையால் வளைகுடாவில் ஆயுத சமநிலை பாதிக்கப்படலாம் என அரபு அணி அஞ்சுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# அந்தமான் தீவுகளில் எண்ணெய், எரிவாயு!

போர்ட்பிளேயர், பெப் 10 வங்கக்கடலில் உள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்தமான் தீவுகளில் எரிவாயு மற்றும் எண்ணெய் ஆகியனவற்றை அகழ்வதற்கான வணிக ரீதியான ஆய்வுகளை ஆரம்பிக்கவுள்ளதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

கடலில் கணிசமான எண்ணெய் மற்றும் வாயுப் படிவுகள் இருப்பதாக ஆய்வுகள் தெரிவித்துள்ளன. அதனை அடுத்து தரையில் சுமார் 37 ஆயிரம் சதுரகிலோ மீற்றர் பரப்பளவுள்ள இரு பகுதிகளில் ஆய்வுப் பணிகளுக்காக விடப்படவுள்ளன.

அந்தமான் தீவுகளில் இந்தியாவின் மிக முக்கியமான கடற்படைத்தளம் உள்ளது. அந்தமானில் சுதந்திர துறைமுகம் ஒன்றை உருவாக்கும் திட்டத்தை பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்திய அரசு முன்னர் நிராகரித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உலக அரங்கில்

### காங்கிரஸிலிருந்து பூட்டாசிங் நீக்கம்

புதுடில்லி, பெப் 10 முன்னாள் மத்திய அமைச்சரும் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான பூட்டாசிங் காங்கிரஸ் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

கட்சிக்கு விரோதமான நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டதைத் தொடர்ந்து அவர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டதாக காங்கிரஸ் பேச்சாளர் தெரிவித்தார். (ஐ-3)

### மலேசியாவும் எதிர்ப்பு

கோலாலம்பூர், பெப். 10 ஈராக் மீது படை பலம் பிரயோகிக்கும் அமெரிக்காவின் நிலைப்பாட்டை எதிர்க்கும் நாடுகளின் வரிசையில் மலேசியாவும் சேர்ந்து கொண்டுள்ளது.

வெளிநாடுகளைப் பணிய வைக்க படைபலம் பிரயோகிக்கப்படுவதை மலேசியா கடுமையாக எதிர்ப்பதாக மலேசியப் பிரதமர் மஹதிர் முகமட் தெரிவித்துள்ளார். (ஐ)

# ஈராக்மீது நடவடிக்கை; பாப்பரசர் எதிர்ப்பு

வத்திக்கான் பெப். 10 ஈராக் மீது இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு தனது துணிப்பட்ட எதிர்ப்பை திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் வெளியிட்டுள்ளார்.

பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

ஆயுதப் பிரயோகம் மக்களிடையே புரிந்துணர்வுகளை மேலும் சிக்கலாக்குமே தவிர பிரச்சினைகளுக்கு நீண்டகால தீர்வாக அமையாது என்றும் அவர் கூறினார்.

# சவுதி விமானத்தளங்களை அமெரிக்கா பயன்படுத்தாது!

வாஷிங்டன், பெப். 10 ஐ. நா. ஆயுத மேற்பார்வையாளர் பிரச்சினை தொடர்பாக ஈராக்குக்கு எதிராக இராணுவத் தாக்குதல் எதனையும் நடத்துவதற்காக சவுதி அரேபியாவில் உள்ள விமானத்தளங்களைப் பயன்படுத்திக் கொள்வதில்லை என அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

பக்கத்து நாடுகளான குவைத்தும், பஹ்ரேய்னும் தங்களது பிரதேசங்களில் இருந்து பக்தாதின் மீது தாக்குதல் நடத்துவதற்கு அனுமதி அளிக்கத்தயாராகவிருக்கின்றன என்று அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சர் வில்லியம் ஹோகேன் கூறியுள்ளார்.

சவுதி அரேபிய மன்னரைச் சந்தித்துப் பேசுவதற்காக செங்கடல் துறைமுகமான ஜெத்தாவுக்கு தம்மை ஏற்றிச் சென்ற விமானத்தில் இருந்தவாறே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதனிடையே அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திருமதி மெடலின் ஆல்பிரைட் சி. பி. எஸ். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அமெரிக்கா தலைமையிலான இராணுவத் தாக்குதல் ஒன்றை தொடங்குவது தொடர்பாக முடிவு ஒன்று மேற்கொள்ள முன்னர் ஆயுத மேற்பார்வை சம்பந்தமான ஐ. நா. ஆயுத முறைப்படுத்தல் விதி முறைகளுக்கு ஏற்ற நடப்பதற்கு ஈராக்கிற்கு அதிபருக்கு இன்னமும் சில வாரங்கள் அவகாசம் இருக்கின்றன என்று தெரிவித்தார். (ஐ-3)

# சந்திரனில் விரைவில் மனித குடியேற்றம்

சந்திரனில் நீர் இருக்கும் வாய்ப்பு ஓரளவு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சந்திரனின் தரையை ஆராய்ந்து கொண்டிருக்கும் அமெரிக்க நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இது உண்மை என உறுதிப்படுத்தப்பட்டால் சந்திரனின் தரையில் மனித குடியேற்றம் இடம்பெறுவதற்கு வாய்ப்பு உருவாகிவிடும்.

செவ்வாயில் தளம் அமைப்பதற்கு முன்னதாக சந்திரனில் தளம் அமைக்கப்பட்டுவிடும்.

அடுத்த சில வாரங்களில் இந்த உண்மை உறுதிப்படுத்தப் பட்டுவிடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்திரனின் தரையில் சூரிய வெப்பமோ ஒளியோ சிறிதேனும் என்றுமே படாத குழிகளில் பனி உருவாகியிருக்கலாம் என விஞ்ஞானிகள் நீண்டகாலமாகக் கூறி வருகின்றனர். (ஐ-3)

# போரினால் மக்கள் படும் துன்பங்களை ஆன்மீக பலம் மூலம் களைய வேண்டும்

## அ. ம. தியாகிகளின் தலைவர் சாகோ கருத்து

குருநகர் பெப். 10 உலகம் முழுவதிலும் இப்போது போர் மேகங்கள் சூழ்ந்து வருகின்றன. அதனால் அந்தந்த நாட்டு மக்கள் பெரும் துன்ப துயரங்களை அனுபவிக்கிறார்கள். அந்த மக்களின் துயரங்களை ஆன்மீக பலம் கொண்டு களைய முன்வர வேண்டும். அதுவே ஆன்மீகவாதிகள் செய்யக் கூடிய மிகப் பெரிய தொண்டாக அமையும்.

உலக அமல மரித் தியாகிகளின் தலைவர் அருட்திரு. மாசல்லோ சாகோ இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அமல மரித் தியாகிகள் கால் பதித்து 150 ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம் கடந்த மாத மத்தியில் நடைபெற்றது.

அக் கொண்டாட்டத்தினை ஒட்டி யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியில், மதுரம் சதுக்கத்தில் நடைபெற்ற கலை மாலைப் பொழுதில் அருட்திரு. சாகோ சிறப்புரை நிகழ்த்தினார்.

அவர் தமது சிறப்புரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இம் மண்ணில் எத்தனையோ இடர்களைத் தாங்கிய மக்களின் துயர்களை அறிந்து மிகவும் கவலை அடைகின்றேன். இக்கவலைகளின் மத்தியிலும் அமல மரித் தியாகிகளின் 150 வருட பணி நினைவுகளில் மக்கள் ஒன்றிணைந்துள்ள இவ்வேளையில், உங்களுடன் ஒன்றாக இருப்பதிலும் அ.ம. தி களின் பணிகளுக்கு நீங்கள் காட்டுகின்ற ஒத்துழைப்புக்களையும் கண்ணுற்று பெரு மகிழ்ச்சி கொள்கின்றேன்.

எமது சபையின் பணித்தளம் சிறப்புற இம் மண்ணில் கால் பதித்து 150 ஆண்டுகள் வரை இங்கு பணியாற்றி வந்த துறவிகள் மட்டும் காரணமல்லர். அவர்களின் பணிகளைப் புரிய ஒத்துழைத்து ஆன்மீகத்திலும், கல்விப்பணியிலும், சமூகமுன்னேற்றத்திலும் ஈடுபட்டு வளர்த்த உள்ளங்களையும் நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டிய இந் நன்னாளில் உங்களுடன் இருப்பதில் நானும் பெரு மகிழ்வடைகின்றேன் — என்றார்.

இவ்விழாவுக்கு வட மாநில அ. ம. தி. கள சபை முதல்வர் அருட்திரு. பி. யேசு நேசன் அடிகளார் தலைமை வகித்தார்.

அவர் தமது தலைமையுரையில் தெரிவித்ததாவது-:

இத்தனை ஆண்டுகளும் எமது சபையின் குருக்கள் ஆலயங்களிலும் கல்விக்கூடங்களிலும் ஆற்றிய பணிகளை இம் மண்ணின் மக்கள் நன்கறிவார்கள். தூரதேசத்திலிருந்து வந்த குருக்கள் இம் மண்ணின் மக்களுடன் பணி செய்த நாள்கள் இன்றும் பலரால் நினைவு கூரப்படுகிறது. அவர்களின் தியாகத்தில் வளர்ந்த சபையின் பணிகள் சிறப்பாக இருந்தமையை பலதரப்பட்ட நிலையில் நினைவூட்டும் போது அவர்களின் அர்ப்பணத்தின் அர்த்தம் வெளிப்படுகின்றன. அவர்கள் இங்கு ஆன்மீக விதைகளை விதைத்ததுடன், தாமும் இம்மண்ணின் விதைகளானார்கள். தம் தியாகத்தின் பரிசாக பலநல்ல மனிதர்களை உருவாக்கி அன்பிலும், அறிவிலும், ஆன்மீகத்திலும் சிறந்த சேவையாளர்களைக் கொண்ட சமூகத்தை உருவாக்கிய சாட்சிகளானார்கள் — என்றார்.

இந்நிகழ்வில் ஆய்வுரையாற்றிய மறைஆசிரியர் எஸ். சவுந்தரம் தமது உரையில் தெரிவித்ததாவது:-

யாழ். மண்ணிற்கு வந்த ஐரோப்பிய அமலமரித் தியாகிகள் முதலில் எமது மொழியைக் கற்றுக் கொண்டார்கள். அவர்களுடைய மொழி அறிவு பிற்காலத்தில் மறையுண்மைகளைக் கொண்ட கட்டுரைகள், கதைகள், நாவல்கள், செபங்கள் எழுதும் அளவுக்கு [illegible] இவர்கள் கால நேரம் பார்த்து மக்களின் சேவைக்காக தங்களையே இவை வாக்கிக் கொண்டார்கள். மக்களின் விழியின் பொருள் உணர்ந்து, உணர்வுகளின் கனம் அறிந்து மக்களோடு மக்களாகி மகாஞான ஒடுக்கம் முதல் மணி அடித்து மக்களைக் கூட்டிச் சேர்த்து செய்யும் நற்செய்திக் கூட்டங்கள் வரை நடத்தி மக்களுக்கு விசுவாசப் புத்துணர்வு தந்தார்கள்.

சுய மொழிப் பாடசாலைகள் என்ன, ஆங்கில மொழிப் பாடசாலைகள் என்ன யாழ். கத்தோலிக்க திருச்சபையில் அத்தனை பாடசாலைகளையும் கட்டி எழுப்பி உருவாக்கி வளர்த்துவிட்டவர்கள் அமல மரித்தியாகிகள்தான்.

மனிதனை பூரணர் ஆக்கும் சைங்கரியம் கல்வியில்தான் உண்டென்பதைக் கண்ட இவர்கள் ஆண்களும் பெண்களும் சுய மொழியில் ஆங்கிலக்கல்வியும், உயர்கல்வியும் பெற ஆவன செய்தார்கள். பெண்பிள்ளைகளுக்கான கல்விக் கூடங்களையும் பொறுப்பேற்று நடத்த திருக்குடும்ப கன்னியர் சபையினரை வரவழைத்து பெண்களுக்கான துறவு நிலை வாழ்வுக்கு இம் மண்ணில் வித்திட்டவர்களும் அமலமரித் தியாகிகள்தான் — என்றார்.

கலைமாலைப் பொழுதில் கலை நிகழ்ச்சிகள் பாடசாலைகளாலும் கலைக் குழுக்களாலும் நடத்தப் பட்டன. (அ-51)

### பிரார்த்தனை

கொழும்புத்துறை, பெப். 10 நீர்வை - வட கோவை அருள்மிகு ஸ்ரீசாந்தி துர்க்கை அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் போது தினசரி மாலை 4.30 மணி தொடக்கம் மாலை 5. 30 மணி வரை நாடு நலம் பெற இறைஆசி வேண்டி கூட்டுப்பிரார்த்தனையும். சமயச் சொற்பொழிவும்நடைபெற்று வருகின்றன. (இ-30)

### பிரிவுபசாரவிழா

கொழும்புத்துறை, பெப். 10 யாழ் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கடந்த 10 வருடங்களாக ஆசிரியர் ஆகவும் உப அதிபராகவும் பின் 1989 ஆம் ஆண்டில் அதிபராகவும் பதவி ஏற்று பணி செய்த செ. கேசவராஜன் ஓய்வு பெற்றார். இவரது சேவைநலன் பாராட்டு விழா கல்லூரியின் உப அதிபர் வி. தம்பாப்பிள்ளை தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. (இ-30)

### நிரந்தர கட்டடம்

சண்டிலிப்பாய், பெப் .10 தற்காலிக வகுப்பறை கொட்டகையில் இயங்கிவரும் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு மழை காலம் வரும் முன்பு நிரந்தர கட்டடம் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று சண்டிலிப்பாய்க் கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெ. இருதயநாதன் கல்வித் திணைக்களத்தை கேட்டுள்ளார். வலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளருக்கு அண்மையில் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ் வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார். (இ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினர் - பொலீஸார் இணைந்து மட்டக்களப்பில் வீடுவீடாக தேடுதல்

மட்டக்களப்பு, பெப். 10

மட்டக்களப்பு நகரில் புளியந்தீவு மேற்குப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 5.30 முதல் இராணுவமும், பொலீஸாரும் இணைந்து வீடு வீடாகத் தேடுதல் நடத்தினர்.

பெண் இராணுவப் பொலீஸாரும் சேர்ந்து நடத்திய இந்தத் தேடுதலில் ஆண், பெண் சகலரும் மட்டக்களப்பு பிரதான பஸ் நிலையத்துக்கு செல்லுமாறு பணிக்கப்பட்டனர்.

தற்காலிக குடியிருப்பளார்களும், நிரந்தர குடியிருப்பாளர்களும் தனித்தனி வரிசைகளில் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

தற்காலிகமாக வசிக்கும் பெண்கள் துருவித் துருவி விசாரிக்கப்பட்டனர். (இ-3)

## விருது வழங்கி கௌரவிப்பு

சுழிபுரம், பெப். 10

காசிகொண்ட வசன நூலை எழுதியதற்கு பண்டிதர் இ. பொன்னம்பலவாணருக்கு சித்தாந்த மணி என்னும் சிறப்பு விருதை சுழிபுரம் சைவ நன்னெறிக் கழகத்தினர் வழங்கி உள்ளனர். இவ் விருதை நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் கழகத்தினர் சார்பாக வழங்கினார். (இ-28)

## யாழ். மக்கள் நிலைமை குறித்து சார்ள்ஸிடம் தெரிவிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ். நகரப் பகுதியில் படையினரின் சோதனை நிலையங்கள் கடுமையாக அமைந்துள்ளன. இயல்பு வாழ்க்கை நிலை ஏற்பட அவை முட்டுக்கட்டையாக உள்ளன.

இப்படி கொழும்பு வந்த பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸிடம் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் அவரைச் சந்தித்த யாழ். பிரஜைகள் குழுவில் இடம்பெற்ற அருட்திரு அன்ரன் ராசநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். பிரஜைகள் குழுவின் சென்ற பிரமுகர்கள் யாழ். மக்கள் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகளை எடுத்துக் கூறினர்.

"யாழ். மக்கள் இன்னமும் இயல்பு வாழ்க்கை நிலைக்கு திரும்பவில்லை. அவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகிறார்கள்" என்றும் அவர் தெரிவித்தார்.

இக்குழுவில் அங்கம் வகித்த கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தான ஆதீனகர்த்தா நகுலேஸ்வரக் குருக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் எமது பாரம்பரிய ஆலயம் உள்ளது. இன்னும் அங்கு செல்ல முடியாதுள்ளது" என்று தெரிவித்தார்.

இக்குழுவின் கருத்துக்களை அவதானமாகக் கேட்ட இளவரசர் சார்ள்ஸ் யாழ். மக்களின் இன்னல்களுக்கு கவலை வெளியிட்டார்.

அங்கு வந்து மக்களுடன் கலந்துரையாட விரும்பினேன். ஆனால் முடியவில்லை என்றும் இளவரசர் கூறினார். (இ-3)

## மார்ச் ஓய்வூதியத்துடன் நிலுவைப் பணம் கிடைக்கும்

அரியாலை, பெப் 10

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கான ரூ.260 ஓய்வூதிய நிலுவைப்பணம் மார்ச் மாத ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்கப்படவுள்ளது-

கடந்த 1988 ஜனவரி முதல் 1989 ஜூன் வரையான 18 மாதங்களுக்கான இந்த வாழ்க்கை செலவுப் படி நிலுவைகள் ஓய்வூதியத்துடன் சேர்ந்து வழங்கப்படவுள்ளது.

இதுபற்றிய சுற்றறிக்கை சகல பிரதேச செயலர்களுக்கும் ஓய்வூதிய பணியாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வடமாநில ஓய்வூதியர் சம்மேளன தலைவர் சீ.வீ. கே.சிவஞானம் தெரிவித்தார்.

இக்கால பகுதிக்குள் ஓய்வு பெற்றவர்களது நிலுவை ஓய்வு பெற்ற மாதத்தில் இருந்து கணிக்கப்படும் என்றும் சிவஞானம் தெரிவித்தார். (ஐ-17)

## எல்பிட்டிய படுகொலைகள்:

## முக்கிய சந்தேக நபர் துப்பாக்கிச் சூட்டில் பலி

கொழும்பு, பெப். 9

எல்பிட்டியவில் 16 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக முக்கிய சந்தேக நபர் பொலீஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்;

குடுகேவத்தகந்த என்ற இடத்தில் மறைந்திருந்த சந்தேக நபரை கைதுசெய்ய பத்தேகம பொலீஸார் நேற்று முன்தினம் நடவடிக்கையில் இறங்கினர்.

றஞ்சித்தம்முள்ள அல்லது களுமாத்தையா என்ற இந்த சந்தேக நபர் பொலீஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். பொலீஸார் திருப்பித்தாக்கியதில் இவர் கொல்லப்பட்டார்.

ஐந்து சந்தேகநபர்கள் இப்படுகொலை தொடர்பாக பொலீஸாரினால் தேடப்பட்டு வந்தார்கள். நான்கு பேர் ஏற்கனவே பொலீஸாரின் துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டு விட்டனர். (இ-9)


### வியாபாரி மூலை அருள்மிகு
### ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்
[ நாச்சிமார் கோயில் ]

### சம்புரோஷண மகாகும்பாபிஷேகமும், ஸ்ரீ சக்கரேஸ்வரி பிரதிஷ்டா பெரும் சாந்தி விழாவும்

தைத் திங்கள் 28 ஆம் நாள் [ 10 - 02 - 1998 ] செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கும் 9 மணி 03 நிமிடம் வரையுள்ள சுபவேளையில் நடைபெறும்.

மகா கும்பாபிஷேக பிரதமகுரு:
சிவஸ்ரீ மகா கணபதி
சிவானந்தராஜாக் குருக்கள்
[வேதாரணியம் திருமூலர் திட்ஷா குருமரபினர், இன்பர்சிட்டி சித்திவிநாயக தேவஸ்தானம், வியாபாரி மூலை]

சர்வபோதகம்:
சிவஸ்ரீ சிவகுஞ்சிதபாதக் குருக்கள்
[பிரதமகுரு, தெணி அம்பாள்தேவஸ்தானம், திருநாவலூர்]

சிறப்பு அருளாசி உரைகள்:
சிவாகம சித்தாந்த ஞானதேசிகபானு
பிரதிஷ்டா லங்காரலோசரம்
சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர் ( ஜே. பி )
(தலைவர், அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை, பிரதமகுரு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம், வல்வெட்டித்துறை)

விநாயகர் துரந்தரர்:
சிவஸ்ரீ சோமாஸ்கந்த விஜயரத்தின குருக்கள்
[பிரதமகுரு புற்றளை சித்தி விநாயகர் தேவஸ்தானம், புலோலி]

ஆலய பிரதம குருவும்,
நிர்வாகத்தினரும்.

விழா சிறப்புற அன்னையின் அருள் வேண்டிப் பிரார்த்திப்போர்:

### ஈஸ்வரி நகை அகம்
(உரிமை; ஆ. செல்வநாயகம்)
பிரதானவீதி, பருத்தித்துறை.
(சி/2846)


## பாராட்டு விழா

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் கடந்த 10 வருட காலம் கனிஷ்ட அதிபராகக் கடமையாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற திருமதி பி. கியூபெனடிக்குக்கு வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் சேவைநலம் பாராட்டு விழா நடத்த உள்ளனர். (இ-30)

## கள் விலை குறைப்பு

தென்மராட்சி, பெப். 10

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் கள்ளின் விலையை மூன்று ரூபாவினால் குறைத்துள்ளன.

பனங்கள்ளின் உற்பத்திஅதிகரித்ததையடுத்து சாவகச்சேரி, கொடிகாமம், பளை ஆகிய இடங்களில் உள்ள சங்கங்களின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கள்ளின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-117)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ். வட்ட வியோ கழகம் நடத்தும் உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இரண்டாம் சுற்றின் முதலாவது போட்டி நாளை புதன்கிழமை மாலை 3 30 மணிக்கு பாசையூர் அன்ரனீஸ் மைதானத்தில் நடைபெறும். (இ-4)

## புனரமைப்பு

கோண்டாவில் மேற்கு அமரகவி சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திக்கழகம், கவி விளையாட்டுக் கழகம் ஆகிய அமைப்புக்கள் புனரமைக்கப்பட்டு மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளன.

இந்த அமைப்புக்களுக்கான புதிய நிர்வாக சபையும் அமைக்கப்பட்டுள்ளது. (இ-3)


### யா/இணுவில் இந்துக் கல்லூரி
### சிறுவர் சித்திரச் சோலை
### திறப்பு விழா

காலம்: 10-02-1998 செவ்வாய்க்கிழமை
காலை 9.00 மணி (இலங்கை நேரம்)

தலைவர்: திரு. க. கனகராசா
(கல்லூரி அதிபர்)

பிரதம விருந்தினர்: திரு. அ. தற்பரானந்தன்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், உடுவில் கல்விக் கோட்டம்)

கௌரவ விருந்தினர்: திரு. க. தேவராசா
(தலைவர், வணிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பழைய மாணவர்கள், பெற்றோர்கள்,
அபிவிருத்திச் சபையினர்.

(53264)



### மனையியல் டிப்ளோமா
### பயிற்சி III


புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

பயிற்சி நெறிகள்

★ நவீன ஆடை தயாரித்தல், பூவேலை, சமையற்கலை, பெயின்ரிங், கேக் ஐசிங், சிகை அலங்காரம், மணப்பெண் அலங்காரம், கோலம்.
★ பாடசாலையை விட்டு விலகியோர், சுயதொழில் வாய்ப்பைப் பெற முயற்சிப்போர் 25 - 02 - 98 இற்கு முன் விண்ணப்பிக்குக.
★ பயிற்சிகள் இலவசம்

பணிப்பாளர்,
மகளிர் அபிவிருத்தி நிலையம்.
இல. 7, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம். [53269]


## 31 ஆம் நாள் நினைவுகளில்



மாவிட்டபுரம்:
1942-05-12

தெய்வமாய்:
1998-01-11

### அமரர் இராசையா மகாலிங்கம்

பாசமுள்ள ஐயாவே! உங்களின் எளிமையாலும்!
நாவினிலே இனிமையாலும் செயலினிலே பண்பினாலும்
எம் மனதில் நிறைந்தவரே! வாழும் காலத்தை
குறைத்துக்
கொள்வீர்கள் என நாம் எண்ணவில்லையே
உங்கள் பிரிவின் எம்துயரை
எவராலும் துடைக்க முடியாதையா!
சொர்க்கத்தில் நீங்கள் சுகமாய் வாழ
என்றும் நாம் பிரார்த்திப்போம்.

இன்று நடைபெறும் [10—02—1998] வீட்டுக் கிரியையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து ஐயாவின் விருந்தோம்பல் பண்பை சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் ஆத்மாவை ஆராதிக்கும்!
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், மருமகள்,
சகோதர சகோதரிகள்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (53268)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாளிமார் சம்மேளனத்துடனான பேச்சுவார்த்தை இழுபறி நிலையில்

கொழும்பு, பெப். 10

முதலாளிமார் சம்மேளனத்துடன் நடைபெறும் பேச்சுவார்த்தை இழுபறி நிலையில் இருப்பதாக இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளரின் சம்பள விவகாரம் தொடர்பாக ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையைப் போக்குவதற்காக தொழிற்சங்கங்களுடன் மீண்டும் முதலாளிமார் சம்மேளனம் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தோட்டத்தொழிலாளர்களின் 105 ரூபா சம்பள உயர்வுக் கோரிக்கைக்கு சில தனியார் தோட்ட நிர்வாகங்கள் செவிசாய்ப்பதுடன் இச் சம்பளத்தை வழங்க தாம் முன்வருவதாக தெரிவித்துள்ளதாக பிரதி அமைச்சரும், மலையக மக்கள் முன்னணித் தலைவருமான எஸ். சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

(இ-3)


**NEW SCIENCE COLLEGE**

குருநாதர் ஒழுங்கை, JAFFNA.

**PURE/APPLIED MATHS**

**98 A\L** Mon., Wed., Fri. 4. 30 P. m.

PURE: தாயங்கள்

APPLIED: நிகழ்தகவு

**97 A\L** Day Tue., Thu. 6. 30 A. m.

PURE: வகையீடு சமன்பாடு

APPLIED: ஏவுகணை இயக்கம்

★ வகுப்புகள் மாணவர் நலன் கருதி NEW SCIENCE HALL இல் நடைபெறும்.

ஆசிரியர்: A. RAVI

[53247]



மனமாரப் பாராட்டி

**வாழ்த்துகின்றோம்**

யா/ அனலைதீவு தெற்கு
அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயம்
அனலைதீவு

17 வருடகாலத்தின் பின் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்தி இப்பாடசாலை சாதனை படைத்துள்ளது.

ஆண்டு - 5 புலமைப் பரிசில் பரீட்சை
1997 இல் தோற்றிய
செல்வி ர. மீனாம்பிகை

அவர்கள் 103 அதிகூடிய புள்ளி பெற்று இப்பாடசாலைக்குப் பெருமை தேடித் தந்துள்ளார். இவரைப் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(53258)


## முது தத்துவமாணி பட்டம்

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் கிருஷ்ணபிள்ளை விசாகரூபன் முதுதத்துவமாணி பட்டத்தினைப் பெற்றுள்ளார்.

1992 ஆம் ஆண்டு தமிழை சிறப்புப் பாடமாகப் பயின்று முதலாம் வகுப்பில் சித்தி பெற்ற இவர் பட்டப்பின் படிப்புக்காக கலித்தொகை பற்றிய ஆய்வினை விரிவாக மேற்கொண்டார்.

இதற்காக யாழ். பல்கலைக்கழகம் இவருக்கு முதுதத்துவமாணிப் பட்டம் வழங்கியுள்ளது. (இ-3)

## நெடுந்தீவில் நுளம்புத் தொல்லை

நெடுந்தீவில் நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளது.

இதனைக் கட்டுப்படுத்த நுளம்புக் கொல்லி மருந்து தெளிக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். சுகாதார சேவைகள் அத்தியட்சகர் அலுவலக அதிகாரிகளிடம் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் கோரிக்கை விடுத்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-111)

## டாக்டருக்கு பாராட்டுவிழா

தென்மராட்சி. பெப், 10

பளை ஆஸ்பத்திரியில் வைத்தியப் பொறுப்பதிகாரியாக கடந்த 12 வருடங்களாக கடைமையாற்றும் டாக்டர் ச. அம்பிகை பாலனுக்கு இப் பகுதி மக்கள் இம்மாதம் 18 ஆம் திகதி பாராட்டு விழாவை நடத்தவுள்ளனர்.

பளை மத்தியகல்லூரியில் பளை ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சங்கத் தலைவர் கா. சுவாமிநாதன் தலைமையில் பாராட்டு விழா நடைபெறும்.

(இ-117)

## மொத்த விற்பனை நிலையம்

தென்மராட்சி, பெப். 10

பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மொத்த விற்பனை நிலையம் நாளை புதன்கிழமை பளை நகரப் பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளதாக சங்கத் தலைவர் சி சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

[இ-117]


வெளிவந்துவிட்டது! பிரதிக்கு முந்துங்கள்
1998 - 99 பகுதானிய புதுவருட

**திருக்கணித பஞ்சாங்கம்**

மலிவு விலையில்

திருக்கணித பஞ்சாங்க மாதக் கலண்டர்
திருக்கணித டயறி
வியாழமாற்ற பலாபலன்கள்
தற்போது விற்பனையாகின்றன.

(53256)



வல் .வை
ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான
பிரதம குருவும், அகில இலங்கை
சைவக்குருமார் அர்ச்சகர்சபைத்
தலைவருமாகிய
சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர் (J. P.)
அவர்கள் வழங்கிய

**ஆசியுரை**

புவனம் முழுவதும் ஆளுகின்ற சக்தியாகிய ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் வியாபாரி மூலைப்பதியிலே ஆன்ம கோடிகளுக்கு அருள்புரிந்து தனதாட்சி புரிந்து வருகின்றாள். தாயாரின் திருவருளினால் ஈசுர வருஷ தைத்திங்கள் 28 ஆம் நாள் [10 - 02 - 1998] தைப்பூசநன்னாளில் சம்புரோக்ஷண மகாகும்பாபிஷேகமும் சகல சௌபாக்கிய சக்கரமாகிய ஸ்ரீ சக்கர பிரதிஷ்டையும் சிறப்புற நடை பெறுவதை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

இக்கும்பாபிஷேகத்தை பிரதம குருவாக இருந்து நடத்தி வைக்கின்ற திருமூல வேதாரண்ய பரம்பரை தீட்சாகுரு மரபில் வந்த சிவஸ்ரீ மகாசிவானந்தராஜாக் குருக்கள் அவர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும், அம்பிகை அடியார்களுக்கும் ஸ்ரீ புவனேஸ்வரி நாச்சியம்பாளின் பெருங்கருணை என்றும் நிலைத்திருக்க வேண்டும் என்றும் ஸ்ரீ சக்கரத்தில் உறையும் ஸ்ரீ காமேஸ்வரி காமேஸ்வரனின் சகல சௌபாக்கியங்களும் கிடைத்து நாடு சுபீட்சம் அடைந்து, நாட்டு மக்கள் அனைவருக்கும் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கவேண்டி அன்னையைப் பணிந்து அனைவருக்கும் ஆசிகூறுகின்றேன்.

''சர்வே ஜனகா சுகினோபவந்து''

சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக
தேசிகர் (J. P.)

[இ/2845]



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 02 — 12 — 1936

மறைவு: 22 — 01 — 1997

**அமரர் செல்லர் ஆறுமுகதாஸ்**

(ஓய்வு பெற்ற தபாலதிபர்)

திதி: 10 — 02 — 1998

ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை எம் மனது
வேண்டுகின்றோம் சாந்தி பெற
இணுவை விநாயகனை.

உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

மனைவி, பிள்ளைகள்,

''திருக்கேதீஸ்வரி இல்லம்''
இணுவில் தெற்கு.

[53134]




## வைத்திய சேவை

Dr. க. சிவனடியான் கொழும்பில் இருந்து நிரந்தரமாய் திரும்பி வந்து சேர்ந்து விட்டார். தினசரி காலையும் மாலையும் நவாலியில் சிகிச்சையளிக்கப்படும்.

(53185)



## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 30 — 06 — 1924

மறைவு: 25 — 12 — 1996

வட அல்வை வித்துவான்

**ம. முருகேசனார்**

ஆண்டு ஒன்று சென்றதேனும் ஐயா உன் நினைவலைகள்
ஈண்டு எங்கள் நெஞ்சினிலே என்றும் மறையாதே.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'ஸ்ரீ சத்தவாசம்'
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

(53257)



முதலாம் ஆண்டு நிறைவில், இரண்டாம் ஆண்டில் இன்று

**சாரங்கா நகை மாடம்**

எமது வளர்ச்சியில் உற்ற தூண்களாக திகழும் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்

உரிமையாளர்:

177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-2781)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

யோகலிங்கம் கார்திகா வெள்ளாம் போகட்டி, கொடிகாமம் என்னும் பெயர் முகவரியை உடைய தேசிய (788272833V) விசேட (091089927) அடையாள அட்டைகள் யாழ். பஸ்நிலையத்திற்கும், வைத்தியசாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ். பஸ்நிலையத்தில் ஒப்படைக்கவும். [53242]

கிட்டினன்செலன், மயிலிட்டி வடக்கு, பிராயடி என்னும் பெயர் முகவரியையுடைய தேசிய அடையாள அட்டை 663150769V யாழ்ப்பாணத்திற்கும் மல்லாகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மல்லாகம் நீதிவான் முகாமில் உள்ள நா. செபரட்ணத்திடம் ஒப்படைக்கவும். [53253]

முத்துவேல்பிள்ளை - கலாமதி என்பவரது தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன இணுவில் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வட்டுகிழக்கு, சித்தன்கேணி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். [53259]

### மணமகன் தேவை

உதயத்தில் சூரியனும் செவ்வாயுமுள்ள 34 வயதுடைய பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரியும் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணிற்கு மணமகன் தேவை. தொடர்பு: இல. 691, C/o உதயன், யாழ்ப்பாணம். [53260]

### வீடு விற்பனைக்கு

இல. 875, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தில் உள்ள வீடு (கண்டி வீதி அண்மையில்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும், திரு அன்ரன், 14/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம் அல்லது 19, மக்கிலியட் Mcleod Road) வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு - 4 தொலைபேசி 584948. ]சி/2852]

### தவறவிட்டவர்கள்!

2-2-98 அன்று கொழும்பில் இருந்து விமானத்தில் பயணம் செய்தவர்கள் பணத்தொகை ஒன்றை தவறிவிட்டிருந்ததால் உரிய ஆதாரத்தைக்காட்டி திருமதி வி சிவக்குமார், 61/, 2 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியில் தொடர்பு கொள்ளவும். [53263]

### மீளமைப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம் முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் மீளமைப்புக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட முகாமைத்துவ மண்டபத்தில் கலைப்பீடாதிபதி அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும்.

## வீடியோ எக்கணமி

மீண்டும் யாழ். நகரில்
வீடியோ CD திரைப்படப் பிரதிகளுக்கு
**வீடியோ எக்கணமி**
இல. 612/4,
கே. கே, எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

[53249]

## வீனஸ் - டில்கா
# வெள்ளி விழா

புதுமெருகுடன் இன்று 10-02-1998
செவ்வாய்க்கிழமை
12.00 மணிக்கும் 1.00 க்கும்
இடையேயுள்ள சுப வேளையில் ஷி விழாவை
யாழ். பிரதேச செயலர்
**திரு. பி. செந்தில்நந்தனன்**
ஆரம்பித்து வைப்பார்

ரீ. வி, றேடியோ, மணிக்கூடு, மின்சார உபகரணங்கள் திருத்துவதிலும், தெளிவாக தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கும், அன்ரனா பொருத்துவதற்கும் பல வருட அனுபவம் மிக்கவர்கள்:

**வீனஸ் - டில்கா**
284, ஸ்ரான்லி வீதி,
(நாகவிகாரை முன்பாக)
யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் யாவரும் நேரில் வந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-2842)

# கண்ணீர் அஞ்சலி

இரசாயனவியல் பேராசிரியர்
## சிவபாதசுந்தரம் மகேஸ்வரன்

யாழ். வளாக விஞ்ஞானபீட இரசாயனவியற் றுறையின் உயிர்நாடியாக விளங்கி தன் வாழ்நாள் முழுவதையுமே மாணவர்களின் கல்விச் சேவைக்காக அர்ப்பணித்த எம் இரசாயனவியல் பீடத்தின் தந்தை பேராசான்

**பேராசிரியர் சிவபாதசுந்தரம் மகேஸ்வரன்**

அவர்களின் பிரிவுத்துயரில் ஆழ்ந்துள்ள அன்னாரின் மனைவி, உறவினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் யாழ். பல்கலைக்கழக இரசாயனவியற்றுறை கல்விசார், கல்விசாரா ஊழியர்கள் ஆகியோருடன் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ். பல்கலைக்கழக இரசாயனவியல் சிறப்பு மாணவர்கள்**
அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம்,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு - 7

(சி/2851)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிரியை அழைப்பும்



தோற்றம்:
13-03-1948

மறைவு:
11-01-1998

## திருமதி மகாலட்சுமி செல்லையா
(சீனியர்)

மெல்லெனப் பேசி நாளும் இன்னல்கள் தீர்த்து வைத்து
இல்லத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்த எம். அன்னையே!
எல்லையில் கருணைமிக்க இறைபதம் அடைந்த தன்மை
சொல்லினில் அடங்கற் பாற்றோ சுற்றமே
தவிக்குதம்மா.

இன்று நடைபெற உள்ள அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் வாடும்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தேவகிரி,
699/2, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம். [53248]

## யாழ். வட்ட
# லியோ கழகம்

நடத்தும்
இரசிகர்களின் அபிமான
உதைபந்தாட்ட வீரர்
தெரிவுப் போட்டி - 1997 - 1998
முதலாம் சுற்று முடிவுகள்

| | பெயர் | வாக்குகள் | கழகம் |
|---|---|---|---|
| 1. | மதன் | 457 | சென். அன்ரனிஸ் |
| 2. | வெள்ளை | 132 | றோயல் |
| 3. | கொலின் | 121 | பாடும் மீன் |
| 4. | செவியர் | 113 | யாழ். பல்கலைக்கழகம் |
| 5. | விஜயன் | 89 | பாடும் மீன் |

(சி-2849) - போட்டிக்குழு

# ஓராண்டு நினைவலைகள்



மலர்வு:
25 — 03 — 1943

உதிர்வு:
22 — 01 — 1997

## அமரர் கனகசபை கணேசன்
(C. T. B. இலிகிதர்)


பற்றுடனே எமைப்பேணி பாசமழை கொட்டி நின்று
கற்றறிந்த மக்களாக்கி காசினி போற்ற வைத்த
அப்பாவே!
ஆண்டுகள் ஒன்றல்ல ஆயிரம் தான் சென்றாலும்
ஆறாது எம் கவலை அகலாது உம் நினைவு.

- குடும்பத்தினர்

அந்திரான்,
கரவெட்டி.

[53254]

# 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் ஏரம்பு சோதிலிங்கம்
(மண்டைதீவு)

மண்ணகம்:
05 – 04 – 1926

விண்ணகம்:
15 – 01 – 1995

திதி: 10 – 02 – 1998

அன்பின் ஊற்றாக
அறிவின் பிறப்பிடமாக
பண்பின் சிகரமாக
பாசத்தின் உறைவிடமாக
குடும்பத்தின் ஒளி விளக்காக
குலத்தின் சோதியாக
பாரினில் புகழ் பூத்த
எங்கள் குலவிளக்கே!
ஆண்டுகள் மூன்றென்ன
மூவாயிரம் கழிந்திடினும்
எங்கள் இதயக்கோயிலினில்
இறையாக வீற்றிருப்பீர்கள்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**சகோதரர், சகோதரி, மைத்துனர்,**
பிரம்படி கொக்குவில்.

சோதி மங்கை மஹால்,
மண்டைதீவு.

(53255)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடுகள், பாடசாலைகள் புனரமைக்க ஜேர்மன் நிறுவனம் உதவி வழங்கும்

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ். மாவட்டத்தில் யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்த வீடுகளையும், பாடசாலைகளையும் புனரமைப்புச் செய்வதற்கு ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் உதவிப் பொருள்களை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளது.

சேதமடைந்த பாடசாலைகள், வீடுகள் போன்றவற்றின் விவரங்களை வகைப்படுத்தி அனுப்பி வைக்குமாறு ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் கொழும்புத் தலைமையகம் யாழ். அரச அதிபருக்கும் யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பதிகாரிக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும், குடும்பத் தலைவர்களை இழந்துள்ள குடும்பங்களுக்கு விசேட புனரமைப்புத் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும்.

இதேவேளை நாவற்குழி கணேசியத்தில் மூன்றில் ஒரு பகுதி வேலைகளையும் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் பொறுப்பேற்று செய்யவுள்ளது.

இது தொடர்பான ஆளவீடுகளை மேற்கொள்வதற்கு கொழும்பிலிருந்து சிவில் பொறியியலாளர் ஒருவரும் மற்றும் ஆலோசகர் ஒருவரும் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

(இ-5)

## வன்னியில் இடம் பெயர்ந்த மக்களுக்கு குடிதண்ணீர் வசதி

வவுனியா, பெப். 10

வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு குடிதண்ணீர் வசதியை வழங்கும் வகையில் வடக்கு - கிழக்கு மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு இரு பவுசர்களை வழங்கவிருக்கிறது.

இந்த பவுசர்கள் மன்னார், முல்லைத்தீவு பகுதிகளில் உள்ள மக்களின் பாவனைக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

### கொம்பனித்தெரு குண்டு வெடிப்பு:

## புடைவை வியாபாரி ஒருவருக்கு அந்த வான் சொந்தமாம்

கொழும்பு, பெப். 10

கொம்பனித் தெருவில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய 'ஹையஸ்' வான் கொழும்பில் உள்ள புடைவை வியாபாரி ஒருவருக்குச் சொந்தமானது என விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் விமானப்படையைச் சேர்ந்தவர் குணமடைந்தால் இச்சம்பவம் குறித்து மேலும் தகவல்களைப் பெற முடியும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

[இ-3]

## இலங்கை எழுத்தாளருக்கு தமிழக அரசு பரிசு

யாழ்ப்பாணம், பெப். 10

இலங்கை எழுத்தாளரான அ. முத்துலிங்கம் எழுதிய "வம்ச விருத்தி" என்னும் நூலுக்கு தமிழக அரசினால் சிறந்த நூலுக்கான பரிசு கிடைத்துள்ளது.

அறுபதுகளில் 'அக்கா' என்னும் சிறுகதைத் தொகுதியை வெளியிட்டதன் மூலம் எழுத்துலகில் பிரவேசித்த இவர் ஐக்கிய நாடுகளில் உயர் கணக்காளராகவும் வெவ்வேறு நிலைகளில் பல உயர் பதவிகளையும் வகித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கொக்குவிலைச் சேர்ந்த இவர் பாகிஸ்தான், ஆப்பானிஸ்தான் போன்ற நாடுகளிலும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-5)

## வடமராட்சி கிழக்கில் கட்டாக்காலிகள்

செம்பியன்பற்று, பெப். 10

வடமராட்சி கிழக்குப்பகுதியில் வயல்களில் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரித்துள்ளது. கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு இப்பகுதி சமக்கார அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

(இ-36)

# திராவிட பாஷாபிவிருத்திச் சங்க தமிழ்மொழி முன்னோடிப் பரீட்சை

## கூடிய புள்ளி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் யாழ். கல்வித் திணைக்களத்துடன் இணைந்து நடத்திய ஜி. சீ. ஈ (சாதாரண) தமிழ்மொழி முன்னோடிப் பரீட்சையில் வலய, கோட்ட மட்டங்களில் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

விவரங்கள் வருமாறு:-

**யாழ்ப்பாணம் கல்வி வலயம்: 1**

1. இ. பிருந்தை (யாழ். திருக்குடும்பகன்னியர்மடம் கல்லூரி), 2 நா. பத்மபிரியா- (வேம்படி மகளிர் கல்லூரி), 3. ச. டினேஸ் - (யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி), 4. தி. காயத்திரி- (யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

**யாழ்ப்பாணம் கல்வி வலயம்: 2**

1 ஆ. இல்டா தர்சிகா- (பருத்தித்துறை மெதடிஸ்த கல்லூரி) 2 மு. குமுதினி- (பருத்தித்துறை மெதடிஸ்த கல்லூரி), 2 ச. பவித்திரா- (பருத்தித்துறை மெதடிஸ்த கல்லூரி), 2 வே. வைதேகி- (பருத்தித்துறை மெதடிஸ்த கல்லூரி)

**கோட்ட மட்ட பரிசில்கள் பெறுவோர்**

**நல்லூர் கல்விக் கோட்டம்**

1 த. துவாரகா- (யாழ். இந்து மகளிர்) 2 தி. நிசந்தன் (யாழ். இந்து) 3 சு. உஷாந்- (யாழ். இந்து).

**சாவகச்சேரி கல்விக் கோட்டம்**

1 சு. சுஜீவா -(வரணி மகா வித்தியாலயம்), 2. ச. மதுநந்தினி (சாவகச்சேரி இந்து) 3 வி. பாலடினேஸ் (சாவகச்சேரி இந்து).

**தீவுப்பகுதி (வேலணைக் கோட்டம்)**

1 தி. பத்மதாஸ் (வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயம்), 2 ஜெ. சதீஸ் குமார் (நயினாதீவு ஸ்ரீ கணேச கனிட்ட மகா வித்.),

**ஊர்காவற்றுறை கோட்டம்**

1 சுட்டெண்: யாஆ। 2970 (காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி)

**கோப்பாய் கல்விக் கோட்டம்:**

1 கு. தர்சனா - (புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி) 2 ச. நாகறூபா (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி) 3 ம. அனிசா (புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி)

**தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம்**

1 கி. நர்த்தனா- (தெல்லிப்பளை மகாஜனா) 2 இ. ஸ்ரீபுரதனி -(தெல்லிப்பழை மகாஜனா), 2 வோ. பவதாரணி -(தெல்லிப்பழை மகாஜனா)

**சங்கானை கல்விக் கோட்டம்**

1 சி. ஆரணி — (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி) சி. பிரசாந்தன்— (வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்.), 3 க. ஹேமா — (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி)

**சண்டிலிப்பாய் கல்விக் கோட்டம்**

1 வி. அனுசா - (மானிப்பாய் மகளிர் கல்லூரி) 2 மோ. தர்சினி - (மானிப்பாய் மகளிர் கல்லூரி), 3 ப. தர்ஷினி - (நவாலி மகா வித்தியாலயம்)

**உடுவில் கல்விக் கோட்டம்**

1 செ. தர்மினி - (உடுவில் மகளிர் கல்லூரி), 2 சி. ஆரபி -(கந்தரோடைகந்தவரோதயா கல்லூரி), 3 செ யசோதரா - (இராமநாதன் கல்லூரி)

**கரவெட்டி கல்விக் கோட்டம்**

1 சி. சிந்துஜா- (இமையாணன் அ. த. க. பாடசாலை), 2 சோ. கவிமோகனா - (இமையாணன் அ. த. க. பாடசாலை) 3 ச. தர்சிகா - (கரவெட்டி ஞானசாமியார் கல்லூரி)

**மருதங்கேணி கல்விக் கோட்டம்**

1 செ. பத்மஸ்ரீ- (மருதங்கேணி இ. த. க. வித்தியாசாலை), 2 ச. காயித்திரி— (உடுத்துறை மகா வித்தியாலயம்)

**கிளிநொச்சி கல்வி வலயம் பளை கல்விக் கோட்டம்**

1 இ. சரிதப - (வேம்பொடுகேணி அ. த. க. பாடசாலை) 2 ... (பளை மத்திய கல்லூரி)

(இ-5)

# செய்திக் கொத்து

## செஞ்சிலுவை அலுவலகம்

சுதுமலை, பெப். 10

மானிப்பாயில் இலங்கைச் செஞ்சிலுவைக் கிளை அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மானிப்பாய் ஆஸ்பத்திரி வீதியில் வீடு ஒன்றில் இது திறந்து வைக்கப்பட்டுள்ளது. இக்கிளை இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்வதற்கு முன்பும் இதே கட்டடத்தில் இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது. (இ-139)

## இம்முறையும் திருநாள் இல்லை

வடமராட்சி, பெப். 10

யாழ். குடாநாட்டிலுள்ள கத்தோலிக்க யாத்திரைத் தலங்களில் ஒன்றானதும் பளை லூர்து மாதா கோயில் வருடாந்த திருநாள் இம்முறையும் நடைபெறாது என பருத்தித்துறை பங்குக்குருவர் அருட்திரு பி. எம். இம்மானுவேல் தெரிவித்துள்ளார். இம்மாதம் 11 ஆம் திகதி இக்கோயில் திருநாள் தினம் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-173)

## தெரிவு

யாழ்ப்பாணம், பெப் .10

உயரப்புலம் ஆனைக்கோட்டை ஐக்கிய சன சமூக நிலைய நடப்பாண்டு. புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

(இ)

## சந்தையின் அவல நிலை

செம்பியன்பற்று, பெப். 10

வடமராட்சி கிழக்குநாகர் கோயில், மாமுனைப் பகுதி சந்தைக்கோட்டையின்கிடுகுகள் பழுதடைந்து விட்டன கடந்த 5வருடங்களாக இவை மேயப்படவில்லை என்று கூறப்படுகிறது. (இ-36)

## பரிசளிப்பு விழா

திருநெல்வேலி, பெப். 10

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்தி சங்கம், யாழ். கல்வித்திணைக்களத்துடன் இணைந்து நடத்திய ஜி சீ. ஈ (சாதாரணம்) தமிழ் மொழி முன்னோடிப் பரீட்சையில் வலய, கோட்ட மட்டங்களில் கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இம்மாதம் 21 ஆம் திகதி நடைபெற உள்ளது.

(இ-135)

## ஆண்டு நிறைவு

தெல்லிப்பழைதுர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 16 ஆம் ஆண்டு நிறைவு விழா எதிர் வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இராமநாதன் கல்லூரி முகப்பு மண்டபத்தில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும். (இ-100)

## கூடிய புள்ளிகள்

சண்டிலிப்பாய், பெப். 10

1997 ஆம் வருட ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயத்தைச் சேர்ந்த க. சிறிபவன் என்ற மாணவர் 138 புள்ளிகளைப் பெற்று சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தில் அதி கூடிய புள்ளிகளைப்பெற்ற மாணவர் என்ற பாராட்டை பெற்றுள்ளார். (இ-135)

## பாலர் பாடசாலை

கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையம் நடத்தி வந்த மனோன்மணி பாலர் பாடசாலை கடந்தகால யுத்த அனர்த்தங்களின் பின் புனரமைக்கப்பட்டு தற்போது செயற்பட்டு வருவதாக நிலையத்தலைவர் கு. சண்முகநாதன் தெரிவித்தார். (இ-30)

## உணவுப் பொதி

தென்மராட்சி, பெப். 10

இலங்கையின் 50 ஆவது சுதந்திர தினத்தையிட்டு படையினர் உலர் உணவுப் பொதிகளையும், உணவுப் பொதிகளையும் தென்மராட்சிப் பகுதியில் மக்களுக்கு வழங்கினர். [இ-117]

## மலசல கூடம் அமைக்க உதவி

நவாலி, பெப். 10

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க சண்டிலிப்பாய் பிரிவு அப் பிரதேசத்திலுள்ள 6 பாலர் பாடசாலைகளுக்கும் வசதியற்ற 4 குடும்பத்தினருக்கும் மலசல கூடம் கட்டுவதற்கு அதற்குரிய பொருள்களை இலவசமாக வழங்கியுள்ளது. [இ-100]

## இடமாற்றம்

வலிகாமம் தெற்கு, பெப். 10

சங்கானை கால்நடை வைத்தியர் கந்தோரைச் சேர்ந்த கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் ப. அருளானந்தன், வட்டுக்கோட்டை பிரிவு போதனாசிரியை செல்வி யோ. துரையப்பா ஆகியோர் தெல்லிப்பழை கால்நடை வைத்தியர் கந்தோருக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். தெல்லிப்பழை பிரிவு கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் எஸ். கலைச்செல்வன் சங்கானைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

(இ-154)

## ஈ. பி. டி. பி. யின் அலுவலகங்கள்

நெல்லியடி, பெப். 10

வடமராட்சிப் பகுதியில் ஈ. பி. டி பி அமைப்பினர் புதிய அலுவலகங்களை திறந்து வைத்துள்ளனர். பிரதான அலுவலகம் மந்திகையில் உள் எம். எல். எவ். கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வெகுவிரைவில் நெல்லியடி, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, பொலிகண்டி, பருத்தித்துறை சிவன் கோயிலடி போன்ற இடங்களிலும் அலுவலகங்கள் திறக்கப்படுமென ஈ. பி. டி. பி. யின் வடமராட்சி அமைப்பாளர் செல்லையா சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

(இ-109)

## கோழித்தீன்

வலிகாமம் தெற்கு, பெப். 10

கோழித்தீனை நியாய விலையில் பலநோக்குக் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையங்களூடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-152)

## ஏற்புத்தடை ஊசி மருந்து இல்லை

வடமராட்சி, பெப். 10

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஏற்புத்தடை ஊசி மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த ஊசி மருந்து இன்மையால் இதனை ஏற்றவரும் நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர். (இ-173)

## செயற்கை முறை சினைப்படுத்தல்

வலிகாமம் தெற்கு, பெப். 10

சுன்னாகத்தில் அமைந்துள்ள தெல்லிப்பழை கால்நடை வைத்தியர் பிரிவில் தற்போது எல்லாக் கிழமை நாள்களிலும்கால் நடைகளுக்கான செயற்கைமுறைசினைப்படுத்தல் மேற்கொள்ளப்படுகிறது. சினைப்படுத்தவிரும்பும் பண்ணையாளர்கள் காலை பத்தரை மணிக்கு முன் காரியாலத்தில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமண வயதெல்லை குறித்த சுற்றறிக்கை

கொழும்புத்துறை, பெப். 10

1997ஆம் ஆண்டின் 12ஆவது இலக்க திருமணப் பதிவு (திருத்த) சட்டத்தின் படி திருமணம் செய்வதற்கான வயதெல்லைகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வயதெல்லைதொடர்பான புதிய நடைமுறைகளை யாழ். மேலதிக மாவட்டப் பதிவாளரும், காணிப்பதிவாளருமான ந. சதாசிவ ஐயர் சகலருக்கும் அறியத் தந்துள்ளார்.

இப்புதிய சட்டத்தின் படி—

18 வயதுக்கு குறைந்த நபர்களின் விவாகத்தை சட்ட ரீதியாக பதிவு செய்ய முடியாது. ஆண் — பெண் இருபாலருக்கும் இது பொருந்தும்.

18 வயதுக்கு மேற்பட்ட நபர்களின் விவாகத்தை பெற்றோரின் சம்மதம் இன்றிப் பதிவு செய்து கொள்ளலாம். ஆண் — பெண் இருபாலருக்கும் இது பொருந்தும்.

முன்பு நடைமுறையில் இருந்த விதிப்படி 18 வயதுக்கும் 21 வயதுக்கும் இடைப்பட்ட நபர்களின் விவாகத்துக்கு பெற்றோரின் சம்மதம் பெறுவது தற்போது அவசியம் இல்லை.

## பணிநலம் பாராட்டும் வரவேற்பும்

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ். மறை மாவட்டக் குரு முதல்வரும் பங்குத் தந்தையுமான அருள் தந்தை ஜே பி. ஈ செல்வரா அவர்களுக்கு பணி நலம் பாராட்டு விழாவும்—

புதிய பங்குக் குருவான அருட்திரு. ரூபன் மரியாம் பிள்ளை அவர்களுக்கு வரவேற்பு விழாவும்—

இன்று செவ்வாய் பிற்பகல் 3.30 மணிக்கு புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலய முன்றலில் நடத்தப்படுகிறது.

யாழ். சுண்டுக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயப் பங்கு மக்கள் இந்த பணிநலம் பாராட்டுவிழாவையும் வரவேற்பு விழாவையும் நடத்துகின்றனர்.

(இ)

## 650 சனசமூக நிலையங்களே தற்பொழுது இயங்குகின்றன

யாழ்ப்பாணம், பெப்.10

யாழ். உள்ளூராட்சி ஆணையாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ள 950 சனசமூக நிலையங்களில் தற்போது 650 சனசமூக நிலையங்களே இயங்கிவருவதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது; மக்கள் மீளக்குடியமராத பகுதிகளிலுள்ள சனசமூக நிலையங்களும் யுத்தத்தினால் கடுமையான பாதிப்புக்குள்ளான சனசமூக நிலையங்களுமே தற்போது இயங்க முடியாத நிலையிலுள்ளன.

கடந்த வருடத்துக்குரிய அரசநன் கொடைகள் யாவும் சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்பட்டு விட்டன. இந்த ஆண்டுக்கான நன்கொடை கொடுப்பனவு விவரங்கள் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த வருடம் அகதிகளுக்கான ஐ. நா. தூதரக நுண் கருத்திட்டத்தின் கீழ் 20சனசமூக நிலையங்களும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 15 சன சமூக நிலையங்களும் புனரமைக்கப்பட்டன.

இந்த ஆண்டும் பல சனசமூக நிலையங்களை புனரமைப்புச் செய்வதற்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் ஒதுக்கீடு செய்து தருவதாக வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இடம் பெற்ற யுத்த அனர்த்தங்களினால் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து சனசமூக நிலையங்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும் நிதியானது சகல சனசமூக நிலையங்களுக்கும் சேரக் கூடியதாக இருக்க வேண்டும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-5)

## அபூர்வ பூச்சி இனங்களை கடத்த முயன்ற ஜேர்மனியர்

### விமான நிலையத்தில் கைதாகினர்

கொழும்பு, பெப். 10

இலங்கையில் இருந்து மிகவும் அபூர்வமான பூச்சி இனங்களைக் கடத்திச்செல்ல முயன்றனர் என்று கூறப்படும் இரண்டு ஜேர்மனியர்கள் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட பூச்சி இனங்களைச் சுங்கத் திணைக்களத்தினர் நூதனசாலைக்கு வழங்கியுள்ளனர். இந்தப் பூச்சி இனங்களுடன் விசேட வலைகள், சில மருந்து வகைகள், வேறு சில கருவிகள் ஆகியவற்றையும் சுங்கத் திணைக்களத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

நூதனசாலையின் பூச்சியியல் பிரிவில் காணப்படாத பல்வேறு அபூர்வ இன பூச்சிகளும் இவற்றுள் அடங்கும்

கைப்பற்றப்பட்ட பூச்சிகளில் பெரும் எண்ணிக்கையான பூச்சிகள் இறந்து காணப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-9)

## தைப்பூசத்தின் சாஸ்திர தத்துவம்

''நெய்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும் தைப்பூசங் காணாது போதியோ பூம்பாவாய்''

இவை திருஞானசம்பந்தரின் திருபாடல் வரிகளாகும். திருமயிலாப் பூரிலே அரவந் தீண்டியதால் இறந்த பூம்பாவை என்னும் மடந்தை நல்லாள் குடத்தினுள்ளே எலும்புக் கூடாய்க்கிடந்தாள். தைப்பூச நன்னாளிலே நாயனார் மேற்படி பாடலைப்பாடி பூம்பாவையை உயிர்பெற்றெழச் செய்தார். எனவே சம்பந்தர் காலத்திலேயே தைப்பூசத்திருநாள் மயிலைப் பெருவிழாவாக நடந்ததை அறியலாம். ஆசார சீலர் வாழ்வில் இந்நாள் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. இந்துக்கள் இதனைப் புண்ணிய நாளாகக் கருதி வழிபாடியற்றுவர்

பூசம் 27 நட்சத்திரங்களில் எட்டாவதாகும். தைப்பூசம் பெரும்பாலும் நிறைமதி நாளாக இருக்கும். தேவர்களின் குருவாகிய பிருகஸ்பதியே பூசநட்சத்திரத்தின் தேவதையாகும். அறிவின் தேவதையும் இவரேயாவார். பூச நட்சத்திரத்தை வழிபட்டால் தேவகுருவை வணங்கியதற்கு ஒப்பாகும். அதன் மூலம் கல்வியறிவும் கலைகளில் தேர்ச்சியும், செல்வ வளமும் சேரும்.

இத்திருநாளிலே உழவர்கள் நெற்பயிர்களின் முற்றிய கதிர்களை அரிந்து இரட்டி வீடுகளில் கட்டி ஆராதிப்பர், அத்தோடு அவற்றில் ஒரு பகுதியை அரிசியாக்கிப் புதிய பானையிற் பொங்கிப் படைத்து வழிபடுவர். நெற்கதிர்களைக் கொய்தல் புதிர் எடுத்தல் என்றும், பொங்கிப்படைத்து உண்ணுதல் 'புதிதுண்ணல்' என்றும் அழைக்கப்படும்.

இவைதவிர இந்த மங்கல நாளிலே, குழந்தைகளுக்குப் பாற்சோறு ஊட்டல்; திருமாங்கல்ய தாரணம், பொன்னுருக்கல், ஏடுதுவக்குதல், வியாபார ஆரம்பம், புதுப் பயிர் நடுகை, காதுகுத்தல் போன்ற நற்கருமங்களைச் செய்யவும் இந்துக்கள் இத்தினத்தை தேர்ந்தெடுப்பர்.

நாவலர் பெருமான் கூற்றுப்படி ''தைப்பூசம் வியாழக் கிழமையில் சித்தயோகம் கூடியபௌர்ணமிதினமெனில் இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால் இருக்கொடு தோத்திரம் இயம்ப, குழலொலி, யாழொலி, கூத்தொலி ஏற்றம் பெற; தில்லை நடராசனின் திருநடனக் காட்சியை மாட்சியுடன் மனதில் நிறுத்தி வழிபட வாய்ப்புண்டு'' எனும் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இதற்கான புராண வரலாறும் பின்வருமாறு கூறப்படுகின்றது:

முன்னொரு காலத்தில் சிவனும், திருமாலும் லீலை புரிய விரும்பி முறையே பிட்சாடனக் கோலத்துடனும். மோகினி வடிவத்துடனும் தாருகா வனத்தில் சந்தித்தனர் சிவன் பலவித நடனங்களை ஆடினாரென்றும், இந்த நடன மகிமை பற்றி திருமால் பதஞ்சலி முனிவருக்குக் கூற அவர் அந்த ஆனந்தத் தாண்டவத்தைத் தானும் காண வேண்டுமெனச் சிவனை நோக்கிக் கடுந்தவமியற்றினார் அதற்கு இறைவன் 'அப்பனே இக்காட்சிக்காகவே; வியாக்கிரபாத முனிவர் என்னும் புலிக்கால்முனிவரும் தவஞ் செய்கின்றார். நீங்கள் இருவரும் தொல்லை வினை நீக்கத் தில்லைக்கு வந்து எனது அற்புத ஆனந்தத்திரு நடனத்தை அங்கு காணலாம்'' எனத் திருவாய் மலர்ந்தார்.

அதற்கு ஏற்ப ஒரு தைப் பூசத் திருநாளில், 'ஆர்த்த பிறவித்துயர் கெட நாம ஆர் தாடும்தீர்த்தன்' தன் ஆனந்தத் தாண்டவத்தை அவ்விருவருக்கும் காண்பித்தார். இவர்களைத் தவிர, தேவர்களும், தில்லைவாழ் அந்தணரும், பிறரும் திருநடனக் காட்சியைத் தரிசித்து, மெய் புளகாங்கிதம் எய்தி, காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிச் சிவானந்தப் பேரின்பப் பெருவாழ்வில் மூழ்கினர்.

எனவே எடுத்த பொற்பாதம் கண்டு, மண்ணிலும் விண்ணிலும் நல்லவண்ணம் வாழும் பேறு கைவரப்பெற்ற நாள் தைப்பூசநாளாகும். இத்தினத்தில் விரதம் அனுட்டித்து ஆலயம் சென்று ஆகாரம் உண்பவர் எண்ணியாங்கு வாழ்பவர் என்பது அநுபவமாகும்.

''ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதாரே.

— நா. க சண்முகநாத பிள்ளை

## கடலட்டை, சங்கு ஏற்றுமதிக்கு அனுமதி கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் பெப். 10

கடலட்டை, சங்கு, இறால் கணவாய் ஆகிய கடலுணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் ஏகபோக உரிமை வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு வழங்கப்பட வேண்டும் என்று மேற்படி சமாசம் கடற்றொழில் அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கோரிக்கையின் பிரதிகள் யாழ். அரச அதிபருக்கும் மற்றும் கடற்றொழில் அதிகாரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

மேற்குறிப்பிடப்பட்ட கடலுணவுப் பொருள்களின் தரத்தைப் பேணவும், அவற்றை நிர்ணய விலையில் விற்பனை செய்யவும் கடற்றொழில் அமைச்சிடம் இந்தக் கோரிக்கைமுன்வைக்கப்பட்டதாக சமாச பிரமுகர்கள் தெரிவித்தனர்

(இ 5)

## தண்ணீர் ஓடும் கால்வாயில் கால்நடைகளின் கழிவுறுப்பு

நெல்லியடி, பெப். 10

இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகளின் கழிவு உறுப்புக்கள் தண்ணீரில்ஓடும் கால்வாயில் குவிக்கப்படுவதனால், துன்னாலை மேற்கு வேரோண்டை மயானத்தை அண்டிய பகுதிகளில் துர்நாற்றம் வீசுகிறது.

இதேவேளை இப்பகுதியில் சுமார் 100 யார் தூரத்தில் உள்ள கரவெட்டி ஞானசாரியார் கல்லூரிக்குச் செல்லும் ஆசிரியர்களும் மாணவர்களும் மூக்கைப் பொத்தியபடி செல்கின்றனர்.

## பவளவிழா

கொழும்புத்துறை, பெப். 10

யாழ். இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் பவளவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 30 மணி தொடக்கம் 12 30 மணி வரை நடராசர் அரங்கில் நடைபெறும்,

(இ-80)

## 21 பேருக்கு வீடு

நவாலி. பெப். 10

இலங்கை செஞ்சிலுவைச் சங்க சண்டிலிப்பாய்ப் பிரிவு அப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட வீடில்லாத 21 பேருக்கு வீடுகளை வழங்க முன்வந்துள்ளது.

(இ-100)

★ மலிவு விலையில் ★

அனைவரும் விரும்பிப் பயன்படுத்தும்

லீலா கலண்டர்கள், டயறிகள்

★ மொத்தமாகப் பெற்றுக் கொள்வோருக்கும் வியாபாரிகளுக்கும் விசேட கழிவுகள்

பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் கலண்டர்களை கொழும்பு விலையிலும் 15 வீதக் கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்பு விலை 100 ரூபா

கிடைக்குமிடங்கள்:

உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மொடேர்ண் ஸ்ரோர்ஸ்
பஸ் நிலையம், நெல்லியடி.

கரன் புக்சென்டர்
புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நியாயமான போராட்டம்

மலையகத்தில், சுமார் ஆறு லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்த வேலை நிறுத்தம் நேற்று இப்பத்தி எழுதப்படும் வரை நிறுத்தப்படவில்லை.

தோட்டத் தொழிலாளரின் நாளாந்த சம்பளத்தை 83ரூபாவிலிருந்து 105 ரூபாவாக உயர்த்தவேண்டும் என்பது தொழிற்சங்கங்களினதும்— தொழிலாளர்களினதும் — கோரிக்கை. இந்த விவகாரம் தொழிற்சங்க வேறுபாடின்றி தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளதை குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றி 105 ரூபாவில் இருந்து இறங்கப் போவதில்லை என்று தொழிற் சங்கங்கள் கூட்டாக அறிவித்துமுள்ளன.

சம்பள உயர்வுக் கோரிக்கை நீண்ட நாள்களுக்கு முன்னரே முன்னறிவிப்புச் செய்யப்பட்டிருந்தது. வேலை நிறுத்தத்தைத் தவிர்க்கும் பொருட்டு, சமரசம் செய்து வைக்கும் பொருட்டு, தொழில் அமைச்சர் இருதரப்பினர்களுடன் பேச்சு நடத்தியும் தீர்வு கிடைக்கவில்லை.

வேலை நிறுத்தம் தொடங்கிய பின்னரும் தொழில் அமைச்சர் மீண்டும் ஒரு மாநாட்டை நடத்தினார். ஆனால் இரு தரப்புகளும் விட்டுக் கொடுக்கவில்லை. தொழிலாளருக்கு நாளாந்தச் சம்பளமாக 95 ரூபாவையும் போனஸாக ஐந்து ரூபாவையும் வழங்குமாறு முதலாளிமார் சம்மேளனத்துக்கு யோசனை தெரிவித்திருந்தார்.

அவ்வாறு நாளாந்தம் நூறு ரூபா வழங்குவதானால் இரண்டு வருடங்களுக்குச் சம்பள உயர்வுக் கோரிக்கை எதனையும் முன்வைக்கக்கூடாது என்பது முதலாளிமார் சம்மேளனத்தின் நிபந்தனையாக இருந்தது.

நாட்டின் வருவாயின் பெரும் பகுதியைத் தேடிக் கொடுக்கும் தோட்டத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வரும் முயற்சியில் இப்போது ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார். ஞாயிற்றுக்கிழமை இருதரப்பினருடனும் அவர் நடத்திய பேச்சுக்களில் தீர்வு எதுவும் எட்டப்படவில்லை. இன்று மீண்டும் பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தோட்டத் தொழிலாளர்களைப்பொறுத்தளவில், முன்னரை விட அவர்களது வாழ்க்கை நிலை முன்னேற்றம் கண்டுவிட்டதாக வெளியே சொல்லப்பட்டாலும், அவர்கள் பெறும் சம்பளத்தை ஒப்பீட்டளவில் பார்க்கும் போது இன்னமும் அவர்கள் சுரண்டப்படுவது வெளிச்சமாகத்தெரிகிறது.

நாட்டின் வருவாய் தேடிகளாக இருந்தபோதிலும் அவர்களின் வாழ்க்கைத் தேவைகள் — அடிப்படைத்தேவைகள் — திருப்திகரமான அளவுக்குப் பூர்த்தி செய்யப்படவில்லை. பாகுபாடும் புறக்கணிப்பும் தொடரவே செய்கின்றன.

இன்றைய வாழ்க்கைச்செலவு நிலைப் பின்னணியில் அவர்களது சம்பளக் கோரிக்கை நியாயமானது.

தோட்டத் தொழிலாளி ஒவ்வொருவரும் தமது உடலைக் கயிறாகத் திரித்து கசக்கிப் பிழிந்து இரத்தத்தை வியர்வையாக்கி உழைக்கின்றார்கள். அவர்களுக்கு நியாயம் வழங்க உதவுவது அரசின் கடமை.

வடக்கு — கிழக்குத் தமிழர்களைப் புறக்கணிப்பது போல, மலையகத் தமிழர்களின் நலன்களை மறந்தால் அது ஆபத்தானது என்பது ஞாபகப்படுத்தப்படவேண்டிய ஒன்றாகும்.

# தேயிலைத் தொழிற்துறை பெரிதும் பாதிக்கப்படும்

## அமைச்சர் ரட்ணசிறி எச்சரிக்கை

கொழும்பு, பெப். 10

தோட்டத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் தொடருமானால் தேயிலைத் தொழிற்றுறை பெரிதும் பாதிக்கப்படும் என்று பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கை நியாயமானது; ஆனால் வேலை நிறுத்தம் தொடருமானால் தேயிலைத் தொழில் பெரிதும் பாதிக்கப்படும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சர்வதேச சந்தையில் போட்டியிடக்கூடிய நிலையை உள்ளூர் தேயிலை இழந்து விடும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான வேலை நிறுத்தத்தை முடிவு கட்டும் நோக்கத்துடன் ஜனாதிபதி தலைமையில் மற்றுமொரு சுற்றுப் பேச்சு வார்த்தை நடைபெறவிருக்கிறது.

தோட்ட துரைமார் சம்மேளனம் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நெருக்கடிக்குத் தீர்வுகாண முன்வரவேண்டும் என்று இ. தொ. கா. கேட்டுள்ளது.

வேலை நிறுத்தம் தொடருமானால் அது பெருந்தோட்ட பொருளாதாரத்தை பெரிதும் பாதிக்கும் என்றும் இ. தொ. கா. தெரிவித்துள்ளது.

இதே சமயம், வேலை நிறுத்தம் வெற்றி பெற வேண்டுமானால் தொழிலாளர் ஜனவரி மாதச் சம்பளத்தைப் பெறக் கூடாது என்று இ. தொ. கா. செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகம் தொண்டமான் கேட்டுள்ளார். (ஐ 3)

## மிதிவெடியில் கால் இழப்பு

யாழ்ப்பாணம், பெப் 10

'மிதிவெடி, உட்செல்லாதீர்!' என்ற அறிவித்தலையும் மீறி—மிதிவெடி அப்புறப்படுத்தப்படாத பகுதிக்குள்—விறகு எடுக்கச் சென்ற இளைஞர் ஒருவர் மிதிவெடியில் சிக்குண்டு வலது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்தார்.

சுன்னாகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில், உடுவில் ஆலடியைச் சேர்ந்த ராஜன் சுமன் (வயது 15) என்ற இளைஞரே படுகாயமடைந்தார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

# காத்தான்குடியில் சைக்கிள் குண்டு!

## எவருக்கும் காயம் இல்லை

கல்முனை — மட்டக்களப்பு பிரதான வீதியில் உள்ள காத்தான்குடி பிரதான பொலீஸ் நிலையத்துக்குஅருகில் நேற்று முன்தினம் முற்பகல் 8.30 மணியளவில் சைக்கிளில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்தது.

சம்பவம் நடந்த இடத்துக்கு அருகில் எவரும் அச் சமயம் இல்லாததால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள சைக்கிள்கள் சோதனை செய்யப்பட்டு வருகின்றன.

இதேநேரம் கடந்த சனிக்கிழமை காத்தான்குடி பொலீஸ் நிலையம் மீது புலிகள் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். (இ-8)

# பருத்தித்துறை நீதிமன்றம் விரைவில் இயங்கும்

## இது குறித்து நேற்று ஆராயப்பட்டது

நெல்லியடி, பெப், 10

பருத்தித்துறையில் நீதிமன்றம் திறப்பதற்குரிய கலந்துரையாடல் நேற்றுக் காலை நெல்லியடி பொலீஸ் நிலையத்தில் நடைபெற்றது.

வடமராட்சி சிவில் நிர்வாக இணைப்பதிகாரி பிரிகேடியர் எல். ஆர். விஜயரட்ண, பருத்தித்துறை மாவட்ட நீதிபதியும் நீதிவான் நீதிமன்ற நீதிபதியுமான த. விக்னராஜா பருத்தித்துறை பொலீஸ் அதிபர் எச். ஏ. தகம்பத் நெல்லியடி பொலீஸ் அதிபர் யூ. டி. எச். ஜயநாத், உதவிப் பொலீஸ் அதிபர் ஜி. சி. பிரமுன, வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் உட்பட சுமார் 50க்கு மேற்பட்ட சட்டத்தரணிகளும் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இந்த நீதிமன்றம் இந்த வாரத்தினுள் வதிரியிலுள்ள பழைய நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் இயங்குமென்று தெரிவிக்கப்பட்டது. (இ-109)

# கத்தோலிக்க மதகுரு கைதாகி விடுதலை!

## மட்டக்களப்புப் பகுதியில் சம்பவம்

மட்டக்களப்பு, பெப். 10

மட்டக்களப்பு நகரில் கோவிந்தன் வீதியில் உள்ள புதிய பாலச்சந்தியடியில் கடந்த வியாழக்கிழமை கத்தோலிக்க மதகுருவான அருட்திரு ஜோர்ச் (24வயது) என்பவர் கைது செய்யப்பட்டார்.

விசாரணைகளின் பின்னர் மறுநாள் மாலை அவர் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் இலுப்படிச்சேனையில் அமைந்துள்ள தேவாலயத்தின் போதகரான இவர் நண்பர் ஒருவரின் மோட்டார் சைக்கிளில் நகருக்கு வந்து கொண்டிருந்த சமயமே கைது செய்யப்பட்டார்.

விசேட குற்றப்புலனாய்வுப் பொலீஸாரால் இவர் விசாரிக்கப்பட்டே பின்னர் விடுவிக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. [இ-3]

### தற்கொலைத் தாக்குதல் நடத்திய

# பெண் போராளியின் காதலன் கைதாம்!

கொழும்பு, பெப். 10

கொம்பனி வீதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்புத் தொடர்பான தற்கொலைப் படை போராளி கணேஷா இந்திராணியின் காதலன் எனக் கருதப்படும் தமிழ் இளைஞர் ஒருவரும் அவரது தாயாரும் அவர்கள் தங்கியிருந்ததாகக் கூறப்படும் விடுதியின் உரிமையாளரான தமிழரும் குற்றத்தடுப்பு தலைமையகவிசேட பொலீஸ் குழுவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கணேசா இந்திராணிக்கும் தனக்குமிடையே கடந்த இரு வருடங்களாகக் காதல் தொடர்புகள் இருந்தன எனவும் —

ஆனால் இந்திராணி விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்பதைத் தான் அறிந்திருக்கவில்லை எனவும் —

சம்பவ தினம் தான் மேற்படி யுவதியை கோயிலுக்கு அழைத்துச் சென்று அங்கு அவரை விட்டுவிட்டுத் திரும்பியதாகவும் அதன் பின்னர் அவர் எங்கே போனார் என்பது தனக்குத்தெரியாது என்றும் அந்த இளைஞர் விசாரணையின் போது தெரிவித்துள்ளார்.

அந்த இளைஞனின் நடமாட்டத்தில் சந்தேகம் கொண்டுள்ள பொலீஸார் அவரும் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவராக இருக்கலாம் என நம்புகின்றனர். —என 'லங்கா தீப' பத்திரிகை தெரிவித்துள்ளது. (உ-9-21)

## மாதாந்த அறிவியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 10

இணுவில் தெஸ்பியன் கலை வட்டம் நடத்தும் மாதாந்த அறிவியற் கருத்தரங்கு இன்று செவ்வாய் காலை இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறும்.

இக் கருத்தரங்கில் ''தமிழ் இலக்கிய வரலாற்று செல்நெறியினூடே சங்க இலக்கியங்களுக்குரிய தனித்துவப் பண்பு'' என்னும் தலைப்பில் பொ. அருந்தவநாதன் உரையாற்றுவார். (இ-5)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், பெப். 10

வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி கோயில் தைப்பூசத் திருவிழா இன்று செவ்வாய் இடம்பெறுகின்றது. காலை 9 மணிக்கு சைவசமய வகுப்பு ஆரம்பமாகும். பிற்பகல் 4 மணிக்கு நாம பஜனையை பண்ணிசைப் புலவர் வே. சிவஞானம் நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து விசேட பூசையும் விநாயகப் பெருமான் வீதியுலா வருதலும் இடம்பெறும். (இ 7)

★ ★ ★

பருத்தித்துறை சவனாய் ஓடை ஒழுங்கை மகா மாரி அம்மன் ஆலய தைப்பூசவிழா இன்று செவ்வாய் காலையில் நடைபெறவிருக்கின்றது (இ-109)

★ ★ ★

வண்ணை சாத்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவிலில் இன்று செவ்வாய் காலை 9 மணிக்கு தைப்பூசத் திருவிழா இடம்பெறும்.

கந்தபுராண பாராயணமும், அதனைத் தொடர்ந்து விசேட பூசையும் விநாயகப் பெருமான் வீதியுலா வருதலும் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறும். (இ-7)

★ ★ ★

ஏழாலை அத்தியடி முருகமூர்த்தி கோயிலின் தைப்பூசதின விசேட அபிஷேக ஆராதனைகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று முருகப்பெருமான் வீதி உலா வருவார். (இ-4)

★ ★ ★

இணுவில் கந்தசுவாமி கோயில் திருமஞ்சத் திருவுலா இன்று செவ்வாய் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவிருக்கிறது. இன்று பகல் ஆறுமுகப் பெருமானுக்கு விசேட சங்காபிஷேகம், பூசை, சண்முகார்ச்சனை ஆகியன இடம்பெறும். (ஐ-3)

★ ★ ★

சாவகச்சேரி முத்துமாரி அம்பாள் தேவஸ்தான தைப் பூசவிழா இன்று செவ்வாய் காலை தொடக்கம் நடைபெறும். (இ-117)

★ ★ ★

வண்ணை காட்டுத்துறை அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் கோயிலில் இன்று காலை 9.00 மணிக்கு தைப்பூசத் திருவிழா நடைபெறும். (ஐ)

★ ★ ★

கொழும்புத்துறை ஆத்தியம்பதி அருள்மிகு ஸ்ரீசந்திரசேகரர் விநாயகர் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தைப்பூசத் திருவிழா நடைபெற்று, மாலை 4-30 மணிக்கு பெருமான் மஞ்சத்தில் வெளி வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார். (ஐ-30)

★ ★ ★

தைப்பூசத் திருநாளையொட்டி ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலயத்தில் இன்று முற்பகல் 11.00 மணி முதல் முருகப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று பின்னர் சுவாமி வீதிஉலா வருவார். (ஐ-100)

★ ★ ★

காரைநகர் பயிரிக்கூடல் அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி ஆலய வருடாந்தத் தேர்த் திருவிழா இன்று காலை நடைபெறும். நாளை பூரணை தினத்தன்று தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

பளை, புலோப்பளை புனித லூர்து அன்னை தேவாலய நவநாள் உற்சவத்தின் திருநற்கருணை ஆராதனை இன்று மாலை நடைபெற்று நாளை காலை திருநாட் பாடற்பலி பூஜையும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (ஐ-117)

★ ★ ★

கொய்யாத்தோட்டம் அருள்மிகு ஸ்ரீஞான செல்வ விநாயகர் கோயிலில் இன்று காலை 9.00 மணிக்கு தைப்பூசத் திருவிழா நடைபெற்று மாலை 3.00 மணிக்கு மகேஸ்வர பூசை இடம்பெறும். (ஐ-30)

## நாளை

**தை 29**

புதன்கிழமை

திதி: பூரணை பிற்பகல் 4.33 வரை.

நட்சத்திரம்: ஆயிலியம் மாலை 7.01 வரை.

பூரணை விரதம்

சுபநேரம்: 5.04-6.34

ராகுகாலம்: 12.34-2.04

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண...

(முதலாம் பக்கத் தொடர்)

செய்தி வெளியிட்டுள்ளது.

பெரும்பான்மை இல்லாததால் நிர்வாகத்தை நடத்த முடியாமல் குழப்பம் ஏற்பட்டால்—

அல்லது யாழ். மேயர் திருமதி சரோஜினிதேவி யோகேஸ்வரன் நிர்வாகத்தை நடத்த போதிய ஒத்துழைப்புக் கிடைக்காவிட்டால்—

யாழ். மாநகர சபைக்காக புதிய தேர்தலை நடத்த தமிழர் விடுதலைக் கூட்டணி கோரும் என்றும் அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

''மீண்டும் தேர்தலைச் சந்திக்க நாங்கள் அஞ்சவில்லை'' இவ்வாறு கூட்டணிப் பேச்சாளர் வீ. ஆனந்தசங்கரி கொழும்பில் தெரிவித்தார்.

''வடக்கில் 'ஆயுதம் தாங்கிய ஜனநாயகத்தில்' ஈடுபடமாட்டோம் என்ற அடிப்படைத் திட்டத்துடனேயே எங்கள் கட்சி இத்தேர்தலில் குதித்தது'' என்பதை அவர் நினைவூட்டினார்.

''ஏனைய எந்தத் தமிழ் தீவிரவாதக் குழுவுடனும் கூட்டணி அமைக்கும் எண்ணம் எமது கட்சிக்குக் கிடையாது'' எனவும் அவர் சொன்னார்.

திருமதி யோகேஸ்வரனும் இக்கருத்தை உறுதிப்படுத்தியதாக அப் பத்திரிகை தெரிவித்தது.

''ஆயுதம் தாங்கிய ஜனநாயகத்தில் பங்குதாரராக இருக்க எனக்கு விருப்பமில்லை'' — என்றார் திருமதி யோகேஸ்வரன்.

''யாழ்ப்பாண மக்களின் நலனுக்காக திருமதி யோகேஸ்வரன் பணியாற்றும்வரை அவரை அப்பதவியில் இருந்து வெளியேற்ற எமது கட்சி முயற்சிக்காது'' — என்றார் ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா.

''திருமதி யோகேஸ்வரனை மேயராக மக்கள் தெரிவு செய்துள்ளார்கள். மக்களின் தீர்ப்பை நாம் தூக்கி வீசமாட்டோம். திருமதி யோகேஸ்வரனுக்கு எமது ஆதரவு உண்டு'' — என்றும் தேவானந்தா சொன்னார்.

புளொட் தலைவர் சித்தார்த்தனும் இதே கருத்தை வெளியிட்டார். புதிய யாழ். மேயரை தாங்கள் எதிர்க்கப் போவதில்லை என்று குறிப்பிட்ட அவர், புதிய மேயரின் நடவடிக்கையிலேயே அவரின் எதிர்காலம் தங்கியுள்ளது. அவரது திறமையை அவர்தான் நிரூபிக்கவேண்டும் —என்றும் சொன்னார்.

(உ-9)

## மாகாணசபை...

(முதலாம் பக்கத் தொடர்)

தேர்தல் முடிவுகளை அக்கட்சி பெரு வெற்றியாகக் கருதி, அந்த ஊக்கத்துடன் மாகாணசபைத் தேர்தல் களத்தில் குதிப்பதற்குத் தயாராகி வருகின்றது. மாவை சேனாதிராஜாவை அல்லது வீ. ஆனந்தசங்கரியை மாகாணசபை முதல்வர் வேட்பாளராக நிறுத்தி அக்கட்சி தேர்தலை எதிர் கொள்ளும் என எதிர்க்கப்படுகின்றது.

கிழக்கில் தமிழர்விடுதலைக் கூட்டணிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் தேர்தலை ஒட்டி உடன்பாடு ஏதும் ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று ஓர் அரசியல் விமர்சகர் குறிப்பிட்டார்.

முன்னாள் ஆயுதக் குழுக்களான தற்போதைய தமிழ்க் கட்சிகள், தங்களுக்குள் பிரிந்து நின்றால் அது தமிழர் விடுதலைக் கூட்டணிக்கே தேர்தலில் அதிக வெற்றி வாய்ப்பைத் தரும் என்று அந்தக் கட்சிகளின் தலைமைப் பீடங்கள் கருதுவதாகவும் தகவல்.

எனவே யாழ் குடாநாட்டின் உள்ளூராட்சித் தேர்தலையொட்டி தங்களுக்குள் தீவிரமடைந்த கருத்து வேறுபாடுகளைக், களைந்துவிட்டு ஓரணியில் மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள்வது குறித்து இக்கட்சிகளின் தலைமைப்பீடங்கள் யோசித்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் அல்லது ஈ.பி.டி.பியுடன் இணக்கமான ஒரு போக்கைக் கடைப்பிடிக்க புளொட் விரும்புவதாகத் தெரிகின்றது

வடக்கு-கிழக்குக்கு இடைக்கால நிர்வாகசபை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று இதுவரை காலமும் வலியுறுத்தி வரும் ஈ.பி.டி.பியும் மாகாணசபைத் தேர்தல் அறிவிப்பு வந்தால் முழு மூச்சுடன் தேர்தலில் குதிக்கும் என்று அக்கட்சியின் தலைமைப் பீடத்துடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## சப்இன்ஸ்...

(முதலாம் பக்கத் தொடர்)

பினர் ஆகியோரும், தம்பலகாமம், கந்தளாய் பிரிவுகளைச் சேர்ந்த பொலிஸார் அனைவரும் இந்த அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை —

இப்படுகொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் கந்தளாய் பகுதியைச்சேர்ந்த இன்ஸ்பெக்டர் ஒருவரும், நான்கு பொலிஸாரும் தலைமறைவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது(ஐ-9-10-21)

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத்தொடர்)

கடுஞ் சமர் இடம் பெற்றதாகவும் —

பெரும் எடுப்பில் ஷெல் தாக்குதலை நடத்தியவாறு டாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் மேற்கொள்ளப்பட்ட இந்த நகர்வு முயற்சியைப் புலிகள் கடும் எதிர்த்தாக்குதலால் முறியடித்தனர் என்றும் —

அதிகாலை 1 மணி வரை இச்சமர் தொடர்ந்ததாகவும் — புலிகளின் குரல் அறிவித்தது.

சனியிரவு நடந்த சமரில் ஆறு படையினர் உயிரிழந்ததாகவும், 16படையினர் காயமடைந்ததாகவும்

தமது தரப்பில் மூன்று புலிகள் உயிரிழந்ததாகவும் —

புலிகள் மேலும் அறிவித்தனர்.

அன்பரசன் (கந்தையா கிருஷ்ணகுமார் — யாழ்ப்பாணம்), குட்டித்தங்கம் (கனகரத்தினம் கனகேந்திரன் — யாழ்ப்பாணம்), சிவகணேசன் (தில்லையம்பலம்யோகராஜா — அம்பாறை) ஆகியோரே மரணமடைந்த புலிகள் எனத் தெரிவிக்கப்பட்டது.

## 8 இளைஞரை...

(முதலாம் பக்கத் தொடர்)

மது போதையில் காணப்பட்ட பொலிஸார் இளைஞர்களை அவர்களது வீடுகளுக்குள் புகுந்து பலவந்தமாக அழைத்துச்சென்று பொலிஸ் நிலையத்தில் வைத்து அவர்களைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

இச்சம்பவம் ஏற்படுத்திய பாதிப்பில் இருந்து தம்பலகாமம் பகுதி இன்னமும் மீளவில்லை என செய்தியாளர்கள் தெரிவித்தனர். (ஐ-10)


# அறிவித்தல்

05 - 02 - 1998 இல் நடைபெறவிருந்த பொதுக் கூட்டம் 11 - 02 - 1998 புதன்கிழமை 10.00 மணிக்கு கணித மண்டப இல. 3 இல் (3 M) நடைபெறும். அனைத்து பௌதிக - உயிரியல் மாணவர்களும் கலந்து கொள்ளவும்.

2 ஆம் வருட B பிரிவு மாணவ பிரதிநிதி
விஞ்ஞான பீடம், யாழ். பல்கலைக்கழகம்.

(சி / 2853)

ஊர்காவற்றுறையில் மருந்தகம்

# திறப்பு விழா

அன்புடையீர்!

தீவகம். வாழ் மக்களின் நன்மை கருதி வெஸ்கோ நிறுவனத்தினர் தமது கிளை நிறுவனத்தை இன்று 10 - 02 - 1998 செவ்வாய்க்கிழமை மதியம் 12 - 00 மணிக்கு திறந்து வைக்க இறைவன் திருவருள் பாலித்துள்ளார் என்பதை வாடிக்கையாளர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள், அன்பர்கள் ஏற்றுக் கொண்டு எமது சேவைக்கு ஆதரவு வழங்குவீர்களாக.

நன்றி

யாழ். மருந்தகம் WESCO
யாழ்ப்பாணம், மந்திகை, கல்வியங்காடு.

(சி/2855)

# தாசன் சிகை அலங்கரிப்புக் கலையகம்
# மங்களகரமான திறப்பு விழா

43 வருட சேவையில் புதிய திருப்பம்!

பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் இதுவரை இயங்கிவந்த

தாசன் சிகை அலங்கரிப்புக் கலையகம்

நாளை (11-02-1998) புதன்கிழமை காலை 9-00 — 9-30 மணிக்கு இடையேயுள்ள சுபவேளையில்

இல. 12, சேர் பொன், இராமநாதன் வீதி,
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலியில்
மங்களகரமாகத் திறந்து வைக்கப்படுகின்றது.

அதி நவீன வசதிகளுடன் சிகையலங்கரிப்பு

வடபகுதியில் முதற்தடவையாக அதி நவீன வசதிகளுடன், மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் உள்ள யூனிசெக்ஸ் சிகையலங்கரிப்பு பயிற்சிக் கல்லூரியில், சிகையலங்கரிப்புக் கலையில் விசேட சித்திபெற்ற வல்லுனர்களால் அறிமுகப்படுத்தப்படுகிறது.

★ சப்போ கட் (தலை கழுவிச் சிகை அலங்கரித்தபின் மீண்டும் தலைகழுவுதல்)
★ Hair Dyeing நவீன முறையில் (சிறந்த தலைச்சாயங்கள் பாவித்து)
★ மசாஜ் அதி சிறந்த விஞ்ஞான முறைப்படி
★ பெண்களுக்கான சிகை அலங்கரிப்பு வடிவமைத்தல், மைக்றோ ஷேவ் கீற்றர் பிடித்தல்

மற்றும் சிகையலங்காரத் தேவைகளை நாணயத்துடன் மிகப் பணிவுடன் புரிவோம். ஜெனரேற்றர் மூலம் சகல வசதிகளும் தரப்படும். வந்து பாருங்கள் ஒருமுறை. பின் உங்களை அடிக்கடி வரவழைக்கும்.

# தாசன் சிகையலங்கரிப்புக் கலையகம்

இல. 12, சேர் பொன். இராமநாதன் வீதி,
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

உரிமையாளர்கள்:

ந. மனோகரதாசன் ந. சந்திரதாசன் சி. ஆனந்தராசா

விளம்பர வடிவமைப்பு: ஜோ. எட்டன்

(53261)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி
## தங்கரெத்தினம் சரவணமுத்துப் பத்தர்

திருமதி தங்கரெத்தினம் சரவணமுத்துப் பத்தர் காலமாகிவிட்டார்.

இவர் சாவகச்சேரி, சங்கத்தானை, தட்டாதெருவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை தட்டாதெருவை வசிப்பிடமாக கொண்டவரும், சின்னையாப்பத்தர் தம்பதிகளின் (சங்கத்தானை) மகளும், மயில்வாகனம் பத்தரின் (சங்கத்தானை) பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சரவணமுத்துப்பத்தரின் அன்பு மனைவியும், கந்தசாமி, சடாச்சரம், விசுவலிங்கம், மகேஸ்வரி, தங்கராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும், காமாட்சிஅம்மா, காலஞ்சென்ற தவமணிதேவி, நாகேஸ்வரி, மயில்வாகனம், ஜெகசோதி ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

இவரின் ஈமக்கிரியைகள் 10-2-98 இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் மகளின் இல்லத்தில் (18, அரசடி ஒழுங்கை, தட்டாதெரு, வண்ணார்பண்ணை) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காலை 10.00 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச கந்தசாமி (மகன்)
ச, சடாச்சரம் (மகன்)
ச. தங்கராசா (மகன்)
ச. மயில்வாகனம் (மருமகன்)

18, அரசடி ஒழுங்கை,
தட்டாதெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(53262)

## இளையதம்பி நடராஜா (ஜோட்டை)

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி நடராஜா 09-02-98 இல் காலமானார்.

இவர் சிவஞானப்பூங்கோதையின் அன்புக் கணவரும், நடராஜா ஸ்ரீமான் (கிராம அலுவலர், இணுவில் தென்மேற்கு J/188) அவர்களின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திரு. திருமதி இளையதம்பி மீனாட்சியின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (உரும்பிராய்), காலஞ்சென்ற மகேஸ்வரி (உரும்பிராய்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரது தகனக் கிரியைகள் இன்று(10-02-98) காலை 10.00 மணியளவில் தாவடி இந்து மயானத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
நடராஜா ஸ்ரீமான்(மகன்)
(கிராம அலுவலர், இணுவில் தென்மேற்கு J/188)

(49952)

## ஜேம்ஸ் நீற்றா செல்வராணி

கரம்பொன் ஊர்காவற்றுறையைப்பிறப்பிடமாகவும், 115, முதலாம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட ஜேம்ஸ் நீற்றா செல்வராணி 09-02-1998 (திங்கட்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரான்சிஸ் சேவியர் ஜேம்ஸின் (முன்னாள் ஊழியர், ஊர்காவற்றுறை பட்டினசபை) அன்பு மனைவியும், ஜேம்ஸ் பிரான்சிஸ் சேவியரின் (கிராம அலுவலர், புங்குடுதீவுகிழக்கு) அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;-
ஜே பி. சேவியர்
(மகன்)

115, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(53277)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்(பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10 - 02 - 98 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org